# ரஷ்ய - அமெரிக்க நேரடிச்சண்டைக்கு சீன முயற்சி

## யுகோ. அதிபர் எச்சரிக்கை

Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 49

மலர் 9 இதழ் 8

போன் : 389 National Tamil Daily தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பராபவ மாசி 6 ஜுலைக்கு 7 [18-2-67] சனிக்கிழமை

வியன்னா, பெப். 17

வியட்னாம் நெருக்கடியைப் பயன்படுத்தி ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையே நேரடிச் சண்டையை ஏற்படுத்த கம்யூனிஸ்ட் சீனா முயற்சித்து வருகிறது என்று யுகோஸ்லேவிய அதிபர் மார்ஷல் டிட்டோ எச்சரிக்கை தெரிவித்துள்ளார். இங்கு விஜயம் செய்துள்ள யுகோஸ்லேவிய அதிபர் யுனாவின் விபரீத போக்கை பகிரங்கமாகக் கண்டித்தார்.

வடக்கு வியட்னாமுக்கு ரஷ்யா அனுப்பும் ஆயுதங்களை சீனா இடைமறிக்கிறது. பல சந்தர்ப்பங்களில் அவை வடக்கு வியட்னாம் போய்ச் சேராமல் சீனா நடவடிக்கை எடுக்கிறது. இதற்கு ஒரு காரணம் உண்டு. வடக்கு வியட்

[8ம் பக்கம் பார்க்க]

# தேசீய இளைஞர் படை ஜே. ஆர். அமைக்கிறார்

## ஆர்.ஜி. யு.என்.பி.யில் மீண்டும் சேர்வார்?

கொழும்பு, வெள்ளி

எதிர்க்கட்சியில் முக்கிய தலைவர்களில் ஒருவராக இருந்துவரும் திரு. ஆர். ஜி. சேனநாயகா மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்துகொள்ள முடிவுசெய்திருப்பதாக அரசியல் வட்டாரங்களில் பலத்த ஹேஷ்யம் நிலவுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்வதின் மூலம் பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயகாவின் கையை மேலும்பலப் படுத்துவதற்கு அவர் உத்தேசித்திருப்பதாகவும்அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகின்றது. சமீப காலத்தில் திரு. ஆர். ஜி. சேனநாயகாவுடன் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா மிகவும் நெருங்கி பழகிவந்ததை இந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுவதுடன். ஆர். ஜி. சேனநாயகாவின் வகுப்புவாதக் கொள்கையைக் கைவிட்டு பரந்த தேசிய அடிப்படையில் நாட்டுக்கு உழைக்க முன்வரும்படி அவரைக் கேட்டுக் கொண்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

பிரதமரின் கருத்தை திரு. ஆர், ஜி. சேனநாயகா ஏற்றுக்கொண்டுவிட்டதாக தெரிவிக்கும் இந்த வட்டாரங்கள் அவர்ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைவிட்டு விலகக் கூடும் என்பதற்கான வேறு சில காரணங்களையும் சுட்டிக்காட்டுகின்றன.

வெலிமடை உபதேர்தலின்போது திரு. ஆர். ஜி. சேனநாயகா அங்கு பிரசார வேலைகளில் ஈடுபடவில்லை. அவருக்கு அப்பகுதியில் நல்ல வரவேற்பு இருந்த போதிலும் சுதந்திரக்கட்சியின் சார்பில் அவர் பிரசாரத்தில் ஈடுபடாமல் போவதற்கு அவர் தமது கொள்கையில் மாற்றம் ஏற்படுத்திக்கொண்டிருப்பது தான் காரணம் என்று தெரிவிக்கப் படுகின்றது. அவர் வெலிமடையில் பிரசார வேலைகளில் ஈடுபட்டிருப்பின் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அங்கு அமோக வெற்றி ஈட்டியிருக்கக்கூடும் என்பது சுட்டிக் காட்டப்படுகின்றது.

கொலன்னாவை தொகுதியில் எதிர்க்கட்சியின் சார்பில் திரு. ஆர். ஜி. சேனநாயகா இதுவரை பிரசார வேலைகளில் ஈடுபடவில்லை. இத்தொகுதியில் திரு. டி. பி. இலங்கரத்ன போட்டியிடுகிறார். இவர் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில்

[8-ம் பக்கம் பார்க்க]

## 21-ந் திகதி மசோதா வருகிறது

(நமது நிருபர் கே. நடராஜா)

கொழும்பு, வெள்ளி

**இலங்கையில் இளம் பெண்களையும், இளைஞர்களையும் கொண்ட தேசிய இளைஞர் சேவைப்படையொன்று விரைவில் அமைக்கப்படவிருக்கிறது. இதற்கான ஓர் மசோதாவை ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன இம்மாதம் இருபத்தோராம் திகதி ஜனப்பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிப்பார்.**

தேசிய இளைஞர் சேவைச் சபையொன்றை நிறுவுவதற்கு இம்மசோதா கோருமென்றும் இச்சபையின்கீழ் ஆண்கள், பெண்களை கொண்ட ஒரு தேசிய இளைஞர் படை அமைக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

நாட்டின் முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு இளைஞர் சேவையில் படையொன்று நிறுவப்படவேண்டுமென்று ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன சில மாதங்களுக்கு முன்னரே அரசாங்கத்துக்கு யோசனை தெரிவித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

### நோக்கங்கள்

ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன சமர்ப்பிக்கும் மசோதா, ஒரு தேசிய இளைஞர் சபையை நிறுவக்கோரும். இச்சபை இளைஞர் சேவைப்படையை நிறுவ வழிவகுக்கும். இப்படையின் முக்கிய நோக்கம் சகல முறைகளிலும் நாட்டின் தரத்தை முன்னேற்ற உதவிபுரிவதே.

இளைஞர்களிடையே [ஆண், பெண்] நாட்டுப்

(8-ம் பக்கம் பார்க்க)

## இந்திய பொதுத்தேர்தல்

இந்தியாவின் நான்கு ராஜ்யங்களில் நேற்று பொதுத்தேர்தல் நடைபெற்றது. இன்று காலையில் தமிழ்நாட்டில் இரண்டாவது சுற்று வாக்களிப்பு ஆரம்பமாகிறது.

தேர்தல்கள் பற்றிய செய்திகளுக்கும் பல இடங்களில் நடைபெற்ற சுவையான சம்பவங்களுக்கும் மூன்றும் பக்கத்தைப் புரட்டுங்கள்.

# டிட்டோமீது கொலைமுயற்சி

## வியன்னாவில் 6 பேர் கைது

**வியன்னா, பெப். 17**

**ஆஸ்திரியாவுக்கு விஜயம்செய்துள்ளயுகோஸ்லேவிய ஜனதிபதி மார்ஷல் டிட்டோவைக் கொலை செய்வதற்கு வியன்னாவில் மேற்கொள்ளப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளதாக ஆஸ்திரியாபொலிஸார் அறிவித்துள்ளனர்.**

இக் கொலைமுயற்சி நேற்று இரவு வியன்னாவிலுள்ள "ஹோட்டல் இம்பீரியலுக்கு" முன்பாக மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸாரின் அறிக்கையொன்று கூறுகிறது.

இதுசம்பந்தமாக ஐந்து பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

யுகோஸ்லேவியாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட ஒருவர், இக் கொலை முயற்சியில் ஈடுபட்டிருந்தார் என்றும் இவரிடமிருந்து ஆயுதங்களும், வெடிமருந்துகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யுகோஸ்லேவியாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட இந்த நபர் மேற்கொண்டு [illegible] மனிக்குச்சென்றுஅங்கிருந்து சட்டவிரோதமாக ஆஸ்திரியாவுக்கு வந்ததாகவும் பொலிஸ் விசாரணையின்போது தெரிய வந்தது. இந்த நபரும் வேறு நான்குபேரும் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஜனதிபதி டிட்டோவை சுட்டுக்கொலை செய்ய முயற்சித்ததாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இக்கொலை முயற்சியைத் தொடர்ந்து ஜனதிபதி டிட்டோவுக்கு இப்பொழுது பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யுகோஸ்லேவிய ஜனதிபதி ஆஸ்திரிய அரசாங்கத்தின் அழைப்பின்பேரில் இங்கு [illegible]

தமிழ் மொழிச் சட்டவிதிகள்

## நடைமுறைக்கு கொண்டுவர அ. எ. சங்கம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், சனி

தமிழ் மொழிச்சட்ட விதிகள் அங்கீகாரம் பெற்று ஓராண்டு காலமாகியும் அது நடைமுறைக்குக் கொண்டு வரப்படாததால் அதனை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முழுமையுடன்இயங்க வைக்க அவ்வப்பகுதி மொழிவழித் தொழிற்சங்கங்களின் உதவியுடன் அரசாங்க எழுதுவினைஞர்சங்கம் தொகுதிகள் தோறும் பிரசாரக் கூட்டங்களையும் பொதுக் கூட்டங்களையும் நடாத்தத் தீர்மானித்துள்ளது.

அரசாங்க அலுவலகங்களுக்குச் சென்று ஒவ்வொரு உறுப்பினரையும் தமிழில் வேலை செய்யுமாறு தூண்டுவது, மேலதிகாரிகளின் ஒத்துழைப்பைக் கோருவது, பொதுமக்களின் ஆதரவைப் பெறுவது என்பன இப்பிரசாரக் கூட்டங்களில் கையாளப்படவிருக்கின்றன. அவ்வப் பகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்களையும், மொழித் தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் கொண்டு தொகுதிதோறும் இக்கூட்டங்கள்நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இக்கூட்டங்கள் தொடர்ந்து அடுத்தமாதம் 23-ம் திகதிவரை கிளிநொச்சி, மட்டக்களப்பு, கல்முனை, சாவகச்சேரி, பருத்தித்துறை, வவுனியா, மன்னார், ஊர்காவற்றுறை, மல்லாகம், திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன. [நநி]

நகைகளுக்கு
யப்பான்
ஜுவலர்ஸ்
64, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 518
தந்தி: "யப்பான்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

மனேச்சர்களும்,
விற்பனையாளர்களும்

எங்கள் பெற்ரூேல் விநியோக நிலையங்களுக்கு மனேச்சர்களும், விற்பனையாளர்களும் தேவை. மனேச்சர்பதவிக்குரொக்கப் பிணை ரூ. 3000/-ம் விற்பனையாளருக்கு ரூ. 250/-ம் செலுத்தவேண்டும். மனேச்சர் மாதாந்த வேதனம் ரூ. 175/- விற்பனையாளர் ரூ. 100/-. கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். ஆ. ச. சங்கரப்பிள்ளை அன் பிறதர், 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1545

மனேச்சர்...

எங்கள் அலுவலகத்திற்கு மனேஜர், காசாளர், லிகிதர் தேவை. சகல விபரங்களுடனும் 25-2-67-க்கு முன் மனுச்செய்யவும். செயலாளர், 308/1, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். 2346

பைண்டர்

அனுபவமுள்ள புத்தகம் கட்டுபவர் [Binder] தேவை. ரூளிங் செய்யக்கூடியவர் விரும்பத்தக்கது. விபரங்களுக்கு நேரில். ராஜா புத்தகசாலை, சந்தையடி, சங்கானை. 2347

## வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணனந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## விற்பனைக்கு

திராட்சைக்கன்றுகள்

அனுப். இ-ஷா-கி ரூ. 2. சகுந்தலா. இஸ்கறயில் நீலம் ரூ. 3. யாழ்- முந்திரிகைசெய்கையாளர் சங்கம் கிணைக் காரியதரிசிஇ. கிருஷ்ணசாமி, திருநெல்வேலி வடக்கு யாழ்ப்பாணம். 1538

காணி ஆதனங்கள்

இருபாலையிலும் கல்குடாவிலும் காணி ஆதனங்கள் உடனடியாக விற்பனைக்குண்டு. விசாரணைகளை ஆங்கிலத்தில் உடனடியாக கீழ்க்காணும்விலாசத்துடன்வைத்துக்கொள்ளவும். சோமாதேவி பிளேஸ், கிரிலப்பனை, கொழும்பு-5. 1524

வீடும் காணியும்

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி, கண்டி பிரதான வீதியில் வீட்டோடு கூடிய ஐந்து பரப்புக்காணி உடனே விற்பனைக்குண்டு. முதல் தரமான குடியிருக்கும்பகுதி. மருத்துவ விடுதி அல்லது விருந்தினர் விடுதி அமைப்பதற்கு சிறப்பானது. காணியில் இன்னும் இரண்டு நவீன பங்களாக்கள் கட்டலாம். வீட்டில் தற்சமயம் குடி இல்லை. ஒரு லட்சத்துக்கு மேல் வரும் கோரிக்கைகள் கவனிக்கப்படும். விண்ணப்பம் செய்க: வி. நவரத்தினராஜா, முடிக்குரிய நியாயவாதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 1547

கடைகள்

யாழ்ப்பாணம், பிரதான வீதியில் தற்சமயம் ஒரு பிரபலமான வர்த்தக நிலையம் இருக்கும் கடைகள் உடனே விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும்: வி. நவரத்தினராஜா, முடிக்குரிய நியாயவாதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 1546

## விற்பனைக்கு

கடை....

யாழ்ப்பாணம், பிரதான வீதியில் கடையும், குடியிருக்கும் வசதியும் வெற்றிடமாய் உடனே விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும். வி. நவரத்தினராஜா, முடிக்குரிய நியாயவாதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 1549

## வாடகைக்கு

வர்த்தகநிலையங்கள்

வெள்ளவத்தைப் பகுதியில் இன்னும் சில நிலையங்கள் உடனே வாடகைக்குண்டு. விண்ணப்பிக்கவும்- 128, கெய்ஸர் வீதி, கொழும்பு. 1548

# வானொலி நிகழ்ச்சிகள்

## கொழும்பு

### சனி 18 - 2 - 67

செய்திகள்; காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-20 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர்மன்றம்.

இரவு 6-15 வயலின், 6-45 கிராமசஞ்சிகை, 7-15 செய்திச்சுருள், 7-30 குங்குமம் — மாதர்நிகழ்ச்சி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கவிதை நாடகம், 10-15 நேயர்விருப்பம்.

## சிக்கிம் தேர்தல்

புதுடில்லி, பெப்.17

சிக்கிமில் அடுத்த மாதம் பொதுத்தேர்தல் நடைபெறும்.

## கத்தி வெட்டுக் காயங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

காணித் தகராறென்றினல் எழுந்த சச்சரவைத் தொடர்ந்து ஊரெழுவைச் சேர்ந்தவரும் 10பிள்ளைகளின் தந்தையுமான பாலசிங்கம் என்பவர் கத்தி வெட்டுக் காயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொலிசார் மேலும் புலன் விசாரணை செய்கின்றனர்.

[ந. நி[

## தமிழ் பிள்ளைகளுக்கு இடமில்லை

கொத்மலை, வெள்ளி

கொத்மலை கடியஞ்சேனை பஜாரில் இயங்கும் தமிழ் சிங்களகலவன் வித்தியாலயமொன்றில்புதிதாகத்தமிழ்ப் பிள்ளைகளைச்சேர்க்கமறுக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

அரசாங்க
கேள்விப் பத்திரங்கள்
சுகாதாரப்பகுதி

என் 317—1967-ம் ஆண்டிற்கு கொடிகாமம் பிரசவ விடுதிக்கு பால் தவிர்ந்த உணவு வழங்குதல். கேள்விகள் முடிவு திகதி 12-3-67.

கல்விப்பகுதி

என் 331—மன்னர் பிரிவில் [1] தலைமன்னர் அ. த. க. பாடசாலை [2] தலைமன்னர் பியர் ரோ. க. த. க. பாடசாலை [3] அச்சங்குளம் அ. த. க. பாடசாலை [4] மடுரோட் அ. சி. க. பாடசாலை ஆகியவற்றில் கட்டிட வேலைகள். கேள்விகள் முடிவு திகதி 11-3-67.

இதன் முழு விபரங்களுக்கும் 16-2-67இல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் Iம் பகுதி, IIம் தொகுதியைப் பார்க்கவும். இதன் பிரதிகளைச் சகல கச்சேரிகளிலும், மாவட்ட இறைவரி உத்தியோகத்தர் கந்தோர்களிலும், தபாற்கந்தோர்களிலும், உப-தபாற்கந்தோர்களிலும், புகையிரத நிலையங்களிலும் பார்வையிடலாம். 1958

# 'ஏற்பு வலிக்கு தனி வார்ட் வேண்டும்'

## மரணவிசாரணை அதிகாரி கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

''யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் தினமும்மரணமடையும் நோயாளிகளில் அதிகமானேர் ஏற்பு வலியினலேயே மரணமடைவதாகக் காணப்படுகின்றது. இதுவிஷயத்தில் சுகாதாரப் பகுதியினர் கூடிய கவனமெடுக்க வேண்டும். தற்போது ஏற்பு வலி நோயாளர்களுக்கென நான்கு படுக்கைகள் மாத்திரம் இங்கு ஒதுக்கப்பட்டுள்ளன. திறந்த வார்ட்டுகள் ஏற்புவலி நோயாளருக்கு உகந்ததல்ல. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் ஏற்பு வலி நோயாளர்களுக்கென ஒரு தனி வார்ட்டை அமைத்து அதற்கெனப் பிரத்தியேகமாக ஒரு டாக்டரையும், ஒரு நர்ஸையும் நியமிக்க சுகாதாரப் பகுதியினர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.''

மேற்கண்டவாறு நேற்று முன் தினம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில்நடைபெற்ற ஏற்பு வலி மரணம்ஒன்றுசம்பந்தமான மரண விசாரணை முடிவில் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் தெரிவித்தார்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவரும் 5பிள்ளைகளின் தந்தையுமான சரவணமுத்து வேலுப்பிள்ளை[68 வயது]என்பவருக்கு சில தினங்களுக்கு முன் காலில் தகரம் வெட்டியதாகவும், அதனல் ஏற்பட்ட ஏற்புவலியினலேயே மரணம் சம்பவித்ததாகவும் மேற்படி மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியைச் சேர்ந்தடாக்டர். வி. விநாயகமூர்த்தியும் சாட்சியமளித்த பின்னர் மரண விசாரணை அதிகாரி, ஏற்பு வலியினல் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

[ந. நி]

## உப-தலைவர் தெரிவு

மாவிட்டபுரம், வெள்ளி

மல்லாகம் கிராமசபையின் மாதாந்தக் கூட்டம் தலைவர் திரு. வை. இராசதுங்கம் தலைமையில் நடைபெற்றபொழுது புதிய உப தலைவராக 13-ம் வட்டார உறுப்பினர் திரு. அ. சி. தாமோதரம்பிள்ளை ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். திரு. அ. சி. தாமேதரம்பிள்ளை மல்லாகம் - உடுவில் கோவில்பற்று திடீர் மரண விசாரணை அதிகாரியாகும்.

## வண்டிலிலிருந்து விழுந்து மரணம்

மாவிட்டபுரம், வெள்ளி

கீரிமலை போயிட்டியைச் சேர்ந்த மாதர் சுப்பிரமணியம் [44 வயது] என்பவர் காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் மரணமானது சம்பந்தமாகக் காங்கேசன்துறை மரணவிசாரணை அதிகாரி திரு. அ. குமரகுரு மரண விசாரணை நடத்தினர். மரண விசாரணையில் காலம் சென்றவரும் மற்றும் இருவரும் இளவாலைக்கு வைக்கோல் ஏற்றச்சென்றதாகவும் அங்கு காலம் சென்றவர் குடிபோதையில் காணப்பட்டதாகவும், வைக்கோல் ஏற்றியபின் காலம்சென்றவர் வண்டிலில் ஏற்றப்பட்ட வைக்கோலுக்குமேல் ஏறியிருந்ததாகவும் வண்டில் கீரிமலையில் வருகையில் வைக்கல் குவியலிலிருந்து காலம்சென்றவர் தலைகுப்புற விழுந்ததாகவும் உடனடியாக காங்கேசன்துறை ஆஸ்பத்திரிக்கு எடுத்துக் சென்றதாகவும் அங்கு அவர் மரணமானதாகவும் கூறப்பட்டது.

மரணவிசாரணை அதிகாரி விபத்தினல் ஏற்பட்ட மரணம் எனத்தீர்ப்பளித்தார்.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

நவா
கொம்பனித்தெரு

கிங்ஸ்லி கொழும்பு | பிளாஸா வெள்ளவத்தை | வெலிங்டன் யாழ்ப்பாணம்

விஜயா மட்டக்களப்பு | ஸ்ரீ கிருஷ்ணு திருமலை | விஜிதா ஹட்டன்

அன்பு பாசத்தால் பிணைக்கப்பட்ட ஒரு டாக்டர்!
கால் ஊனம் ஆனதால் தாழ்வு மனப்பான்மை
கொண்டு தத்தளிக்கும் அவர் தங்கை!!
அருமைக் கணவன்மீது சந்தேகங் கொண்ட
அவர் மனைவி!! இவர்கள் மூவரின் கதை-

எஸ். எஸ். ராஜேந்திரன்
விஜயகுமாரி, எஸ். வி. சுப்பையா
எல். விஜயலக்ஷ்மி, நாகேஷ், மணிமாலா
முதலியோர் நடிக்கும்

காக்கும் கரங்கள்

5-வது வாரம்

கெப்பிட்டல் கொழும்பு | மொடேர்ன் பண்டாரவளை

எம். ஜி. ஆர்., ரத்னு,
கே. ஆர். விஜயா, நம்பியார், நாகேஷ்,
மனேரமா
மற்றும் பலர் நடிக்கும்

தொழிலாளி

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30. 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
சிவாஜி - பானுமதி
நடித்த
மக்களைப் பெற்ற
மகராசி

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
GERMAN
FILM FESTIVAL
4-45 p. m.
OH MY PAPA
7-00 p. m.
THE LIAR
9-45 p.m.
EL HAKIM

MANOHARA
JAFFNA
Daily at 4-45, 7-00, 9-45
BIKINI BEACH
Techniscope - Pathecolour

REGAL - JAFFNA
NOW SHOWING
Marilyn Monroe
in
MARILYN

ஞாபகம் வைத்திருங்கள்
சகலவிதமான
கூ. மொ. வி. ஜவுளிகளுக்கும
பொகுமால்ஸ்
49, பிரதானவீதி, யாழ்ப்பாணம.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாட்டில் இன்று 2-வது சுற்று வாக்களிப்பு

## 13 லோகசபை, 78 சட்டசபை ஸ்தானங்களுக்குப்போட்டி

### அஸாம், பீகார், உத்தரப்பிரதேசம், மத்திய பிரதேசத்தில் நேற்றுசுமுகமாக வாக்களிப்பு

புதுடில்லி, பெப். 17

இந்தியப் பொதுத் தேர்தல் வாக்களிப்பில் மூன்ருவது நாளான இன்று அஸாம், பீகார், உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் ஆகிய நான்கு ராஜ்யங்களின் பல பகுதிகளில் தேர்தல்கள் சுமுகமாக நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அஸாமில் இன்று முதற் கட்டமாகவும் மற்றைய ராஜ்யங்களில் இரண்டாவது கட்டமாகவும் வாக்களிப்பு நடைபெற்றது. இந்த ராஜ்யங்களில் மொத்தம் 400 சட்டசபைத் தொகுதிகளுக்கும் 131 லோகசபை ஸ்தானங்களுக்கும் இன்று தேர்தல்கள் நடைபெற்றன. இன்றையத் தேர்தல்களில் இரண்டு கோடியே இருபது லட்சம் பேர் வாக்களித்திருப்பார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

மத்தியப்பிரதேசத்தில் இன்று இரண்டாவது நாளாக வாக்களிப்புத் தொடர்ந்து நடைபெற்றது. கடந்த தேர்தல்களிலும்பார்க்க இம்முறை வாக்களிப்பு சுறுசுறுப்பாகவும் ஏராளமான பேர் வாக்களிப்பில் கலந்துகொண்டனர் என்றும் கூறப்பட்டது. ராய்ப்பூர் மாவட்டத்தில் 93 சத விகிதத்தினர் வாக்கெடுப்பில் கலந்து கொண்டனர்.

### ஹெலிகாப்டர்கள் உபயோகம்

அஸாமில் இன்று முதல் தடவையாக வாக்களிப்பு நடைபெற்றது. எல்லைப்பகுதிகளுக்கு நேற்று முன்தினம் தேர்தல் அதிகாரிகள் பல பொருள்களையும் ஹெலிகாப்டர்களில் கொண்டுசென்றனர். அடர்த்தியான காடுகளிலும் மழை அதிகமாகப் பெய்யும் இடங்களிலும் வாக்களிப்புநிலையங்களை அமைப்பதில் ஹெலிகாப்டர்களே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன. அஸாமின் வடக்குப் பகுதியில் இன்று காலை 7-30க்கு வாக்களிப்பு ஆரம்பமாகி மாலை 4-30க்கு முடிவடைந்தது.

### 11 மீஸோ கலகக்காரர் பலி

அஸாமின் ஒரு பகுதியில் மீஸோ கலகக்காரர்களுக்கும் இந்தியப் பாதுகாப்புப் படையினருக்குமிடையே நேற்று நிகழ்ந்த மற்றுமொரு கைகலப்பில் பதினெரு மீஸோ கலகக்காரர்கள் மாண்டதாக ஷில்லாங்கிலிருந்து வெளியாகும் செய்திகள் தெரிவிக்கின்றன. மீஸோ மலைப் பகுதியில் லுங்லேசப்டிவிஷனில் மீஸோ கலகக்காரர்களுக்கும் இந்தியத் துருப்புக்களுக்குமிடையே கடந்த வாரம் ஏற்பட்ட ஒருகைகலப்பில் இந்தியப் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த பன்னிரண்டு துருப்புகள் கொல்லப்பட்டனர். மீஸோ கலகக் கோஷ்டியினர் துப்பாக்கிகள் உட்பட பல ஆயுதங்களை வைத்திருந்தனர் என்றும் பல இடங்களில் இந்திய ரோந்துப் படையினருடன் அவர்கள் மோதினர் என்றும் அறிவிக்கப்பட்டது.

### வாக்குப்பெட்டிகள் மீட்கப்பட்டன

சில தினங்களுக்கு முன்னர் தேர்தல் அதிகாரிகளிடமிருந்து பகை நாகர்கள் களவாடிய வாக்குப்பெட்டிகள் நாகலாந்து பொலிசாரினல் மீட்கப்பட்டுள்ளன. இந்த வாக்குப் பெட்டிகளை ஆயுதம் தாங்கியபகை நாகர்கள் முன்னர் களவாடியிருந்தன.

பீகார் ராஜ்யத்தில் சில பகுதிகளில் இன்று இரண்டாவது சுற்று வாக்களிப்பு நடைபெற்றது. நான்கு மத்திய மந்திரிகள் போட்டியிடும் தொகுதிகளில் இன்று வாக்கெடுப்பு இடம்பெற்றது. இங்கு மொத்தமாகவுள்ள 318 ராஜ்ய சட்டசபைத் தொகுதிகளில் 79 இடங்களுக்குத் தேர்தல்கள் இன்று நடைபெற்றன.

### தமிழ்நாட்டில் இன்று இரண்டாவது சுற்று வாக்களிப்பு

தமிழ்நாட்டில் நாளை சனிக்கிழமை இரண்டாவது சுற்று வாக்களிப்பு ஆரம்பமாகும். முதல் சுற்று வாக்களிப்பு கடந்த பதினைந்தாம் திகதி இடம் பெற்றது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கும். நாளை பதின்மூன்று லோகசபை ஸ்தானங்களுக்கும் எழுபத்தியெட்டு சட்டசபை ஸ்தானங்களுக்கும் போட்டி நடைபெறும். மொத்தம் 68 லட்சம் பேர் நாளைய தினம் வாக்களிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நாளை நடைபெறும் சட்டசபைத் தொகுதிகளில் காங்கிரஸ் அபேட்சகர்களே கூடுதலாகப் போட்டியிடுகின்றனர். 59 திராவிடமுன்னேற்றக்கழக அபேட்சகர்களும், 19 சுதந்திரா அபேட்சகர்களும், 12 கம்யூனிஸ்ட் அபேட்சகர்களும் குடியரசு அபேட்சகர்களும் ஏராளமாக சுயேச்சையாளரும் சட்டசபைத் தொகுதிகளில் போட்டியிடுகின்றனர். லோக்சபை ஸ்தானங்களைப் பொறுத்த ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு காங்கிரஸ் அபேட்சகர் போட்டியிடுகிருர். தி. மு. க. சார்பில் ஏழுபேரும் கம்யூனிஸ்ட் சார்பில் நான்கு பேரும் சுதந்திரா சார்பில் நான்கு பேரும் போட்டியிடுகின்றனர். சட்டசபைத் தொகுதிகளில் பதின்மூன்று நேரடிப் போட்டிகளும் லோக்சபை ஸ்தானங்களுக்கு மூன்று நேரடிப் போட்டியும் ஆறு மும்முனைப் போட்டியும் நாளை இருக்கும்.

### சிறுசிறு சம்பவங்கள்

○ கோவை மாவட்டத்திலுள்ள திம்பம் எனுமிடத்தில் தேர்தல் வேலையாகச் சென்று கொண்டிருந்த இரண்டு அதிகாரிகளை கரடிகள் தாக்கின. அதிர்ஷ்டவசமாக இவர்கள் தப்பிக் கொண்டனர். ஜீப்பில் இவர்கள் சென்றுகொண்டிருந்தபொழுது இரண்டு கரடிகள் தாக்க ஆரம்பித்தன என்றும் தேர்தல் அதிகாரிகள் ஜீப்பிலிருந்து இறங்கி ஒரு மரத்தில் ஏறி உயரமான கிளையில் சுமார் இரண்டுமணி நேரம் வரை இருந்தனர் என்றும் பின்னர் கரடிகள் சென்றுவிட்டன என்றும் தகவல் கிடைத்துள்ளது.

○ விருதுநகர் தொகுதியில் திரு. கு. காமராஜரை எதிர்த்து நிற்கும் தி. மு. க. அபேட்சகர் திரு. சீனிவாசனுக்கு ஆதரவாக வேலைசெய்த மதுரை தியாகராஜர் கல்லூரியைச் சேர்ந்த முத்து, ராஜாமணி ஆகிய இரண்டு மாணவர்களும் பலத்த காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். காலையில் தேர்தல்வேலைகளைக் கவனித்துவிட்டு இரவு ஒரு வீட்டு மாடியில் நித்திரை செய்துகொண்டிருந்த பொழுது இனம்தெரியாத சிலர் அங்கு வந்து முத்துவை தூக்கி மாடியிலிருந்து கீழே எறிந்தனர் என்றும் சத்தம் கேட்டு ராஜாமணி கீழே குதித்ததாகவும் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது. முத்துவின் நிலைமை கவலைக்கிடமாக விருப்பதாக அறிவிக்கப்பட்டது.

○ [illegible] வயதுள்ள இருவர் தன்னுடன்வர 120 வயதுள்ள தோகல்[illegible] என்பவர் நேற்றுத் தேர்தலில் வாக்களித்தார்.

(5-ம் பக்கம் பார்க்க)

## படகு மூழ்கி 250 பேர் பலி

டெஹ்ரான், பெப். 17

டெஹ்ரானிலிருந்து புறப்பட்ட படகொன்று ஆற்றில் கவிழ்ந்ததில் 250 பேர் பலியானர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரயாணிகளுடன் இப்படகு டெஹ்ரானிலிருந்து சென்றுகொண்டிருக்கையில் புயல் வீசியதென்றும் புயலிச் சிக்குண்டே பின்னர் ஆற்றில் மூழ்கியதாகவும் செய்திகள் தெரிவித்தன,

## ரஷ்யரை சீனர் தாக்கினர்

மாஸ்கோ, பெப். 17

வடக்கு வியட்னும் சென்ற ரஷ்யர்களை சீனர்கள் தாக்கியதாக ரஷ்ய பத்திரிகையான 'பிராவ்டா' குற்றம் சுமத்தியுள்ளது.

''வடக்கு வியட்னும் மக்களின் முதுகில் குத்தப்பட்ட செயல் இது'' என்று பிராவ்டா கண்டித்துள்ளது.

## பாபா அரங்கு

திருவனந்தபுரம், பெப். 17

காலஞ் சென்ற இந்திய அணுசக்தி நிலையத் தலைவர் டாக்டர் பாபாவின் நினைவாக கேரளத்தில் அரங்கொன்று இன்று திறந்து வைக்கப்பட்டது.

மா- ஸே .துங்

## எதிர்ப்பாளர்களிடம் மஞ்சூரியா வீழ்ச்சி?

### 400 செங்காவலர்கைது

ஹாங்காங், பெப். 17

சீனுவின் வடகிழக்கு மாகாணமான மஞ்சூரியா, மா-ஸே-துங் எதிர்ப்பாளர்களிடம் 'வீழ்ச்சி' அடைந்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மா-ஸே-துங் ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்குமிடையே நிகழ்ந்த கைகலப்பில் பலர் காயம் அடைந்தனரென்றும் சுமார் 400 செங்காவலர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் இவர்களில் மூவர் கொல்லப்பட்டனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. ரயில் சேவைகள் இங்கு பாதிக்கப்பட்டுள்ளன. மா-ஸே-துங் எதிர்ப்பாளர்களுக்கு அங்குள்ள இராணுவம் உதவி புரிந்ததாகக் கூறப்படுகின்றது. போர்மோஸாவுக்கு முன்பாகவுள்ள ஒரு மாகாணத்திலும் மா-ஸே-துங் எதிர்ப்பாளர்களின் கை ஓங்கிவருவதாகச் சொல்லப்படுகிறது.

இதற்கிடையே சிங்கியாங்கில் மா-ஸே-துங் எதிர்ப்பாளர்கள் முன்னணியில் நிற்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

## ஹனேய் புகார்: அமெரிக்கா மறுப்பு

வாஷிங்டன், பெப். 17

சமாதானப் பேச்சுகளுக்கு அமெரிக்கா முட்டுக்கட்டையாக இருந்ததாக ஹனேய் தெரிவித்த புகாரை அமெரிக்கா மறுத்துள்ளது.

நிபந்தனையற்ற பேச்சுகளுக்கு வருமாறு வடக்கு வியட்னும் கோரியிருந்ததென்றும், ஆனல் அமெரிக்கா நிராகரித்துவிட்டதென்றும் ஹனேய் வானெலி குற்றஞ்சாட்டியுள்ளது.

வியட்னும் நெருக்கடி குறித்து, எந்த இடத்திலும். எப்பொழுதும் சமாதானப் பேச்சு நடத்தத் தயார் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

### வில்ஸன் அறிவிப்பு

நேற்று பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் எம். பி.யொருவர் பிரதமர் வில்ஸனிடம் வியட்னும் நெருக்கடியைத் தீர்த்துவைப்பதில் அமெரிக்க அதிபருடன் நெருங்கிய தொடர்பு உண்டா என்று கேட்டார்.

''இவ்விஷயத்தில் அவரும் நானும் ஏற்கனவே மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிருேம்'' என்று பிரதமர் பதிலளித்தார்.

## விஞ்ஞானியின் சாதனை

மாஸ்கோ, பெப். 17

செய்மதிகளை சரியான பாதையில் செலுத்தும் திட்டத்தை லெனின் கிராட்டைச் சேர்ந்த கண்பார்வை இழந்த 36வயதுள்ள விஞ்ஞானியொருவரே கண்டுபிடித்திருந்ததாக ரஷ்யா அறிவித்துள்ளது. ரஷ்ய விஞ்ஞானிகள் இத்திட்டத்தைமுப்பது வருடங்களாக ஆராய்ச்சிசெய்தும் கண்டுபிடிக்க முடியாமலிருந்தனராம்.

## கடுமையான தாக்குதல்

சைகோன், பெப். 17

கம்போடிய எல்லைக்கருகே மூன்று அமெரிக்க ராணுவ டிவிஷன்கள் வியட்காங்கியரின் கடுமையான தாக்குதலுக்குள்ளாகி இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மரண தண்டனை

சனு, பெப். 17

உளவுவேலையில் ஈடுபட்ட குற்றத்துக்காக நேற்று இங்கு ஏமன் இனத்தவர்கள் நான்கு பேர் பகிரங்கமாகச் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

கத்திவெட்டுச்சம்பவம்

## மூவர் பிணையில் அனுமதி

சாவகச்சேரி, வெள்ளி

சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த கணபதி சின்னம்மா என்பவரை கத்தியால்வெட்டியதாக சந்தேகத்தின் மீது சி.கிட்டினன், நீ. சின்னத்தம்பி, க. நீலன் ஆகிய மூவரையும் சாவகச்சேரிப் பொலிசார் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஆஜர் செய்தனர்.

மாஜிஸ்திரேட்திரு. ஆர். இளையபெருமா இம்மூவரையும்தலா ரூ250 பிணையில் செல்ல அனுமதித்து மேல் விசாரணையை இம்மாதம் 20-ம்திகதிவரை ஒத்திவைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

எதிர்காலத்தைப் பற்றி நீங்கள் சிறிதும் விசாரப்படக்கூடாது. கைக்குழந்தை தாயின் மடியிலே எப்படி நிம்மதியாகவும், மகிழ்ச்சியுடனும் எவ்வித கவலையுமின்றி சுணத்துக்குக்கணம் வாழுமோ அதுபோல் இறைவனிடம் பரிபூரண சரணாகதியடைந்து வாழவேண்டும்.

—சுவாமி ராமதாஸ்.


# ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA
Telegram: EELANADU Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு மாசி 6 [18-2-67]


## ஆங்கில பகிஷ்கரிப்பு

"நாய்தான் வாலை ஆட்டவேண்டுமே யொழிய வால் நாயை ஆட்டக்கூடாது" என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு. வால் நாயை ஆட்டத் தொடங்கினல் நாயின் நிலை என்ன ஆகும்? இதேபோல்தான் நமது அரசாங்கமும் அரசாங்க ஊழியர்களும் உள்ளனர். அரசாங்கத்தின் கொள்கைகளையும் திட்டங்களையும் அமுல் நடத்தவேண்டிய அரசாங்க ஊழியர், அரசாங்கம் என்ன கொள்கையைப் பின்பற்றவேண்டுமென்பதை அரசாங்கத்துக்குச் சொல்லிக்கொடுக்கும் பரிதாப நிலையை இங்குதான் காணக்கூடியதாக இருக்கிறது.

சிங்களத்தில் மாத்திரமே வேலைசெய்வோம் என்று லிபிகாரு சங்கம் என்ற ஒரு சங்கம் சில மாதங்களுக்கு முன்னர் தீர்மானித்ததுடன் புத்த பிரான்சிலை முன்னர் அந்தச் சங்கத்தைச் சேர்ந்த தலைவர்கள் ஆங்கில, தமிழ்க் கடிதங்களைப் பகிஷ்கரிப்பதென்றும், சிங்களத்தில் மட்டுமே வேலைசெய்வதென்றும் சங்கற்பம் செய்துகொண்டனர். சமீபத்தில் அரசாங்க குமாஸ்தாக்கள் சேவைச் சங்கமும் இந்த 'பகிஷ்கரிப்பு' தீர்மானம் ஒன்றை மேற்கொண்டிருக்கிறது. சங்க அங்கத்தவர்களுக்கு அது அனுப்பியுள்ள சுற்றுநிருபம் ஒன்றில் ஆங்கிலத்தில் கடமையாற்றவேண்டாம் என்றும், ஆங்கிலத்தைப் பகிஷ்கரிக்கும்படியும் கேட்டிருக்கிறது. ஆங்கிலத்தைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்பதால் சிங்களத்திலும், தமிழிலும் அலுவல்கள் நடைபெறும் என்பதுதான் தங்கள் ஆங்கிலப் பகிஷ்கரிப்பின் 'அர்த்தம்' என்று குமாஸ்தாக்கள் சேவைச் சங்கத்தினர் 'விளக்கம்' தெரிவிக்கக்கூடும். இன்றுள்ள நிலையில் அரசாங்கக் காரியாலயங்களில் சிங்களத்தில் எப்படி அலுவல் நடக்கும், தமிழில் எப்படி அலுவல் நடக்குமென்பதைச் சொல்லவேண்டியதில்லை.

அரசாங்க குமாஸ்தாக்கள் சேவைச் சங்கம் இனமதபேதமின்றி அரசாங்க சேவைக் குமாஸ்தாக்களின் நலனையும் உரிமைகளையும் பாதுகாப்பதற்கென உருவாக்கப்பட்டது. பல வருடங்களாக இயங்கிவரும் இச்சங்கம் பல கஷ்டநஷ்டங்களையும் அனுபவித்துப் பெரும் போராட்டங்களையும்சமாளித்து வந்திருக்கிறது. அதன் போராட்டங்களுக்குப் பொதுமக்களின் ஆதரவும் அனுதாபமும் கிடைத்துமிருக்கிறது. சென்ற சில வருடங்களில் அதன் போக்கு அரசாங்க ஊழியர்கள் மத்தியிலேயே அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது. அச்சங்கத்திலிருந்து அதன் பழையகால அங்கத்தவர்கள் பலர் வெளியேறிவிட்டனர். வெளியேருமல், அதில் மேலும் பலரைச் சேர்த்து அதன் போக்கையே திசை திருப்பியிருக்கலாம். ஆயினும் சங்கத்தின் பழைய அங்கத்தவர்கள்வெளியேறும் காரணத்தை உணர்ந்து சங்கமும் தனது தவறைத் திருத்தியிருக்க வேண்டும். திருத்திக்கொள்வதற்கு மாருக அது மேலும் மேலும் தவருன வழியில் செல்கிறது. இதற்கு 'ஆங்கில' பகிஷ்கரிப்பு மற்ருேர் உதாரணம். அரசாங்கசேவைக் குமாஸ்தாக்கள் சங்கத்தினர் தமிழ்மொழிச் சட்டவிதிகள் கொண்டுவரப்பட்டபொழுது அதை எதிர்த்து பொது வேலைநிறுத்தத்தில் இறங்கியது, அவர்கள் வகுப்புவாதப்பாதையில் செல்லத் தொடங்கியதற்கும், அரசியல் வாதிகளின் தலையீட்டுக்கு இடம் கொடுக்கத் தொடங்கியதற்கும் ஓர் எடுத்துக்காட்டு.

தமிழ்மொழிச் சட்டவிதிகளை எதிர்த்த அரசாங்க சேவைக் குமாஸ்தாக்கள் சங்கத்தினர் 'ஆங்கிலப் பகிஷ்கரிப்பு' என்று கூறும்பொழுது ஆங்கிலத்தையும், தமிழையும் பகிஷ்கரிப்பது என்பதுதான் சரியான அர்த்தமாகும்.

நாட்டின் இன்றைய நிலையில் எந்த மொழியில் அரசாங்க ஊழியர் கடமையாற்ற வேண்டுமென்பது ஒரு பிரச்னையல்ல. நாட்டின் நிர்வாகம், அதாவது அரசாங்கக் காரியாலயங்களில் எந்த மொழியில் அலுவல்கள் நடைபெற்ருலும்சரி துரிதமாகவும் சீராகவும் நடைபெற வேண்டுமென்பதே முக்கியம். உணவு நெருக்கடி ஏற்பட்டு மக்கள் அரைவயிற்றுச் சாப்பாட்டுக்கே அவதிப்படும்போது, வேலையில்லாமலும், வேலைக்கேற்ற வாழ்க்கை வசதி இல்லாமலும் லட்சக்கணக்கானேர் ஏங்கித் தவிக்கும்போது மற்றவர்களைவிட 'வசதியான' வாழ்க்கையுள்ள அரசாங்க ஊழியர் பொதுமக்களுக்கு வீண் கஷ்டத்தை ஏற்படுத்தும் செயல்களில் ஈடுபடுவது நல்லதல்ல. வயல்களில் வேலைசெய்தால் மட்டும் உணவு நெருக்கடி தீராது. அரசாங்கக் காரியாலயங்களிலும் சுறுசுறுப்பாக அலுவல்கள் நடைபெற வேண்டும்.

ஆங்கிலப் பகிஷ்கரிப்பு, மொழி அபிமானமோ தேசாபிமானமோ உடையது என்று இன்றுள்ள நிலையில் எவரும் கருதுவதற்கு இடமில்லை. அரசாங்க ஊழியருக்கு உண்மையில் தேசாபிமானம் இருக்குமானல் அரசாங்க [illegible]லாகாக்களில் நிலவும் லஞ்ச ஊழல்களை ஒழித்துக்கட்டவும் நத்தை வேகத்தில் நடக்கும அலுவல்கள் துரிதமாக நடக்கவும் அரசாங்க ஊழியர் முயற்சிசெய்ய வேண்டும்.

நாட்டின் நிர்வாகம் நிரந்தர உத்தியோக வர்க்கத்தினரின் பொறுப்பிலேயே உள்ளது. நிரந்தர உத்தியோக வர்க்கம் என்பது அரசாங்க உத்தியோகத்தர்களை, ஊழியர்களை அதிகாரிகளையே குறிக்கும். அரசாங்க அதிகாரிகள் என்பது அரசாங்கத்தின் திட்டங்களையும் கொள்கைகளையும் அமுல்நடத்த வேண்டிய பொதுமக்களின் ஊழியர்களாவர். துரதிர்ஷ்டவசமாக இங்கு அதிகாரிகள் தங்களை அரசாங்கத்திற்கும் மேலாகக் கருதி 'அதிகாரவர்க்க ஆட்சி'யே நடத்துகின்றனர். இதில் அரசியல் தலையீடும் ஏற்பட்டுள்ளதால் அதிகார வர்க்கத்தினர் தங்களை அரசாங்க ஊழியர் என்று கருதாமல் அரசியல்கட்சி ஊழியராகவும் கருதுகின்றனர். இது ஜனநாயகத்துக்கே ஆபத்து விளைவிக்கும்.

அரசாங்க ஊழியர்கள் தங்கள் கடமையையும், பொறுப்பையும் உணர்ந்து செயலாற்றவேண்டும். இதேசமயம் அரசாங்க ஊழியரின் கடமையில் அரசியல்தலையீடுகள் ஏற்படாமல் அரசியல் வாதிகள் ஒதுங்கிநிற்க வேண்டும், அரசாங்க குமாஸ்தாக்கள் சேவைச் சங்கம் தனது 'பகிஷ்கரிப்பு' யோசனையை [illegible] அரசியல் [illegible]களிலிருந்து தூய்மைப்படுத்திக்கொள்வது நல்லது.

நாளை கச்சியப்ப சிவசாரியார் திருநாள்

# கலாசார நூல்தந்த கச்சியப்பர்

— வித்துவான், சைவப்புலவர் க. கணபதிப்பிள்ளை —

ஈழநாடு நாவலர் போன்ற அருந்தவப் பெரியோர்களை நல்கியதற்கு மூலகாரணமாக இருந்தது கந்தபுராணமே. கந்தன் கருணையையும் சித்தாந்த சைவ உணர்வையும் காவியரசனையையும் ஒருங்கே தரும் நமது கலாசார அடிப்படை நூல் கந்தபுராணம். பன்னிருதிருமுறைப் பயனுகவும் பதினுன்கு சாத்திரப் பொருளாகவும் அமைந்தது இது. தமிழ் மக்களின் கண்கண்ட தெய்வமாகிய குமரவேளின் கதை நூல், தோத்திர நூல்இது.

கந்தபுராணத்தை உச்சிமேல் வைத்துப் போற்றும் பேறு ஈழநாட்டின் தனிப்பண்பு, தவப்பேறு. எமக்கு ஏற்படும் இன்னலைப் போக்கும் சமய சஞ்சீவியாகக் கந்தபுராணம் விளங்குகின்றது. கந்தபுராணம் நம் சொந்தபுராணமாகக்கொள்வதற்கு மாலிக்கபூரின்படையெடுப்பே பாதைவகுத்தது. தமிழ்நாட்டின்வடபகுதியில் வாழ்ந்த தமிழ்மக்களிற்பலர் ஈழம் புக்கனர். அவ்வேளையிலும் தம்முடன் எடுத்துக்கொண்டுவந்த அருஞ்செல்வமே கந்தபுராணம்.

தொண்டைமண்டலம் கல்வியிற் கரையிலாக் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பல்லவர் ஆட்சிக் காலத்தில் நாயன்மார் பலர் வாழ்ந்தநாடு அது. அப்பர் அருளொளியிற்பட்டு அரசன் மகேந்திரவர்மன் சைவப்பணியாற்றிய நாடு அது. தமிழ்மக்கள் வாழையடி வாழையாகப் போற்றிவந்த இறையுணர்வின் பயனுகப் பன்னிரண்டாம் நூற்ருண்டில் சோழர் ஆட்சிக் காலத்தில் காஞ்சியில் கச்சியப்பர் தோன்றினர். திருமுறைகள் தோன்றிய பின்னரும் மெய்கண்ட சாத்திரங்கள் தோன்றுவதன் முன்னரும் தோன்றினர். சுருங்கக்கூறின் திருமுறையும் மெய்கண்ட சாத்திரமும் ஓர் உருவெடுத்தாற்போலக் கந்தபுராணம் மலர்ந்தது.

வேத ஆகமப்பயன், திருமுறையுணர்வு, மெய்கண்ட சாத்திரஞானம், சோழர் காலத்துக் காவியரசனை, தமிழ் இலக்கியச்சுவை, புராணக்கதை நெறியாவும் சேர்ந்த கந்தபுராணத்தை உச்சிமேற் போற்றி முருகப் பெருமானின் திருவருளுக்குப் பாத்திரமானதாலன்ருே எம்மிடையே ஒரு நாவலர் பெருமான் தோன்றினர்.

"தருமம் என்ெருரு பொருள் உளது; அதைப் போற்றல் நம் கருமம்" எனக் கற்பிக்கும் அறநூல் கந்தபுராணமே. 'சான்றவர் ஆய்ந்திடத் தக்கவாம் பொருள் மூன்று; அவை பதி பசு பாசம்' எனச் சைவசித்தாந்த உணர்வைக் காட்டும் நூல் கந்தபுராணமே. முருகப் பெருமானை "மூவிரு முகங்கள் போற்றி முகம் பொழி கருணை போற்றி" என ஆனந்தக்கண்ணிர் மல்க ஓதித் தோத்திரஞ் செய்ய உதவும் நூல் கந்தபுராணம் "வான்முகில் வழாதுபெய்க" என வாழ்த்தும் நூல் இதுவே.. "இந்திரராகில் பார்மேல் இன்பமுற்று சிந்தையில் நினைந்த முற்றச்" செய்யும் நூல் இதுவே.

"எத்துணைக்காலந் திருப்பித் திருப்பிப் படிப்பினுங் கேட்பினும் எட்டுணையும் தெவிட்டாது தித்தித்து அமுதூறும் அத்தியற்புத அதிமதுரத் திவ்விய வாக்காகிய கந்தபுராணம் என்பது நாவலர் பெருமான் வாக்கு. இத்தகைய" கந்தபுராணத்தைத் தந்தருளிய கச்சியப்ப சிவாசாரியரை ஒவ்வொரு சைவனும் போற்றுதல் தலையாய கடனகும்.

எமக்குவந்த-வருகிறதுயர்களை நீக்கும் மாபெரும் மருந்தாக- அருநிதியாக- அருள் நிலையமாக விளங்கும் கந்தபுராணம் எம் சொந்தப் புராணம் என்பது மகான் செந்திநாதையர் பண்டித மணி போன்ற தவச் சான்ருேர்களின் உள்ளக்கிடக்கையாகும்.

"கந்தபுராணம் ஒரு கற்பகதரு. அது வேண்டுவார் வேண்டுவதை எந்தக்காலத்திலும் ஈதற்கு ஆயத்தமாயிருக்கிறது" எனப் பண்டிதமணியவர்கள் மொழிகின்ருர்கள்.

நாவலர் நமக்கு அளித்த சத்தியவாக்கு ஒன்று உளது. அது பின்வருமாறு

"கந்தபுராணத்தை விதிப்படி மெய்யன்போடு நியமாகக் கேட்பவர்கள் நோய் நீக்கம், செல்வம், புத்திர பாக்கியம், சத்துரு ஜயம், இராசவசியம் முதலிய பயன்களைத் தாந்தாம வேண்டியவாறே பெறுவார்கள். இது நெடுங்காலம்பலராலும்அநுபவத்தினல் நிச்சயித்துணரப்பட்ட விஷயம். இது சத்தியம், சத்தியம், முக்காலுஞ் சத்தியம். கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள் திருவடி வாழ்க." கந்த புராணம் பற்றி இதற்குமேல் உரைக்க எம்மனேரால் இயலுமோ. அதிற் தோய்வதே நமக்கு ஏற்ற ஒரேவழி - ஒப்பற்ற வழி.

# ஐயாறன் எழுதுவது

தமிழ் நாட்டுக்குத் தனிப் பெருமை அளிப்பது அதன் கோவில்களும் கோபுரங்களுமே. அங்குள்ள பல கோவில்களையும் அவற்றின் கலைச் சிறப்புக்களையும், ஸ்தல விசேஷங்களையும் ஆராய்ந்து பார்ப்பதென்ருல் அதற்கு இந்த ஒரு ஜன்மமே போதுமா என்பது சந்தேகம்.

தமிழகத்துக்குப் பல முறையும் சென்றிருக்கிறேன். அங்கு பல வருடங்கள் வசித்துமிருக்கிறேன். ஆனல் அங்கு பார்க்காத கோவில்களுக்குக் கணக்கில்லை. இம்முறை கூடுமான வரை அதிக கோவில்களைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலுடன் சென்றேன். பார்த்த கோவில்களையே எவ்வளவுமுறை பார்த்தாலும் திருப்தி ஏற்படுவதில்லை. மீண்டும் மீண்டும் பார்க்க வேண்டுமென்றும் அங்கு பல நாட்கள் தங்கி இருந்து, சமயகுரவர்கள் பாடியுள்ள பாடல்களைப் படித்துத் துய்க்க வேண்டுமென்றும் தோன்றும். அதற்கெல்லாம் இந்த ஜன்மத்தில் வாய்ப்பேது?

மலையைக் குடைந்து அழகான கோவிலை திருச்சியிலே கட்டியுள்ளானே தமிழன்! அந்த சிராப்பள்ளிக் குன்றுடையானைக் கூறவே உள்ளம் குளிருமென்றுபாடியுள்ளார் ஆளுடைப்பிள்ளை. அதை நேரில் பார்த்து, அக்கோவிலுக்குள் செல்லும் போது எவ்வளவு மகிழ்ச்சியும் இன்பமுமேற்படுகின்றது. சமீபத்தில் அங்கு கும்பாபிஷேகம் நடந்துள்ளது. கோவிலைப் புதுக்கி, அழகான சித்திரங்களைத் தீட்டியுள்ளனர். அந்தச் சித்திரங்கள் பலபல சிவ கதைகளையும் அழகாகச் சொல்லிக் கொண்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் பார்க்கச் சில நிமிடங்கள்தான் கிடைத்தன!

பக்கத்தில் திருவானைக்கா திருப்பணி வேலைகள் பெரிய அளவில் நடக்கின்றன அடுத்து ஒரு மைல் தூரத்தில் ஸ்ரீரங்கம். அக்கோவிலையும் புதுக்கப் பெரிய திட்டங்கள் போட்டுள்ளனர். ஐ. நா. கலாசாரப் பகுதியினரும் உதவப் போகிருர்களாம். ஸ்ரீரங்கம் கோவிலில் சுவாமி பிரசாதமாகிய தயிர்ச்சாதம் முதலியன மலிவான முறையில் கிடைக்கின்றன. சுவாமி தரிசனம் செய்ய, திருமலையைப் போல் டிக்கெட் வைத்து 'கியூவில்' விடுகின்ருர்கள். பழநியிலும்கூட, சந்நிதிக்குப் பக்கத்தில் உட்கார்ந்து தரிசிக்க இப்போது பணம் வசூலிப்பதாகக் கேள்வி. தர்ம தரிசனமும் இருக்கும். ஆனல் அந்தத் தள்ளுமுள்ளுவில் எவ்வளவு பேர் நிம்மதியாக சுவாமியைப் பார்க்க முடியும்!

இம்முறை பார்க்கமுடிந்த கோவில்கள் பல. அவற்றிலே என் மனதைப் பெரிதும் கவர்ந்தவை, தருமபுரம் ஆதீன நிர்வாகத்திலுள்ள கோவில்களே. 27 சைவாலயங்கள் இந்த ஆதீனத்தின் பார்வையிலுள்ளன. இதில், வைத்தீஸ்வரன்கோவில், சீர்காழி சட்டநாதர் ஆலயம், திருநள்ளாறு, திருக்கடவூர் முதலியன குறிப்பிடத்தக்கவை. அந்த ஆதீன அதிபர் கோவில்களுக்காக சென்ற ஆண்டு முதல் ஒரு வெள்ளிக் கேடயம் போட்டிப் பரிசு வைத்திருக்கிருர்கள். எந்த ஆலயம் சுத்தமாகவும், பூசை முதலியன ஒழுங்காகவும் இருக்கின்றதோ அதற்கு ஒரு வெள்ளிக்கேடயம் பரிசளிக்கப்படுகின்றது. அந்தப் பரிசை முதல் வருடத்திலேயே பெற்றது திருக்கடவூர் தேவஸ்தானம்தான். அதாவது மார்க்கண்டேயனுக்

[5-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பள முரண்பாட்டுசபைக்கு ஆசிரியர் சங்கம் மகஜர்

கொழும்பு, வெள்ளி

அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் அண்மையில் கொழும்பு பண்டார நாயக்கா மாவத்தையில் உள்ள கணபதி வித்தியாலய மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. இ. கந்தையாவின் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் சம்பள முரண்பாட்டுச்சபைக்கு பின்வரும் குறிப்புகள் இடம் பெறத்தக்கதாக, அகில இலங்கை ஆசிரியர் சங்கங்களின் கூட்டுச்சபை மூலமாகவே தமது மகஜரைச் சமர்ப்பிப்பதெனச் சங்கம் தீர்மானித்தது. அக் குறிப்புகளாவன-

1. சம தராதரத்துக்கு சமசம்பளம். 2. ஆசிரிய தராதரப் பத்திர ஆசிரியர் சம்பள முரண்பாட்டை அகற்றல். 3. 1958ற்கு முன்பு பயிற்றப்பட்டவர்கட்கு 1-ந்தரமாக்க 5 வருடமும் பிந்தியோர்க்கு 3 வருடமும் என்றதனுல் முன்னையவர்கட்குண்டான தாக்கம். 4. ஆ. தரா. சேவைக் காலத்தைக் கணித்துப் படியேற்றங்கள். 5. பண்டிதர், வித்துவான், புலவர்களில் சிங்கள, தமிழ் வித்தியாசங்களின்றிய மைதல், அவர்கட்கு பட்டதாரிச் சம்பளம். 6. பயிற்றப்பட்டவர்களிலும் பயிற்றப்பட்ட பண்டித வித்துவான் விசேட பயிற்சி உடையோர்க்குக் கூடுதலானபடியேற்றங்கள். 7. சுயபாஷாபயிற்றப்பட்ட பட்டதாரிகளையும் பயிற்றப்பட்ட பட்டதாரிகளாகக் கணித்தல். 8. பதவியுயர்ச்சி வேறுபாடுகள்.

## ஐயாறன்

[4ம் பக்கத்தொடர்ச்சி]

காக எமனை சங்கரித்தபுனித ஸ்தலம். அவசியம் பார்க்க வேண்டும். யாத்திரிகர்களுக்கு வசதியான தங்குமிடமும் கட்டியிருக்கிருர்கள். திருநள்ளாறு என்ற ஸ்தலத்திலுள்ள கோவிலும் இதே ஆதீனத்தின் நிர்வாகத்தில்தான். அங்கு சனீஸ்வரபகவானின்சந்நிதி விசேஷம். இப்போது அங்கே கோடி அர்ச்சனை நடக்கிறது. இம்மாதம் சனி மாற்றத்தை முன்னிட்டு அர்ச்சனைகள் இரவு பகலாக நடந்து கொண்டேயுள்ளன. இன்னும் ஒவ்வொரு கோயிலாகச் சொல்லி உங்கள் பொறுமையைச் சோதிக்க விரும்பவில்லை.

ஆனுல் சில கோவில்கள் உள்ள நிலைமையைப் பார்த்தேன். மனம் மிகவும் வேதனைப்பட்டது. உதாரமாக திருநெய்த்தானம், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி முதலிய பாடல்கள் பெற்ற ஸ்தலங்கள் பாழடைந்து கிடக்கின்றன. திருநெய்த்தானத்திலுள்ள நெய்யாடி அப்பர், பல மாதங்களாக எண்ணையைக் கூடக் கண்டிருப்பதாகத் தெரியவில்லை. இக்கோவில்களுக்கெல்லாம் மானியங்கள் ஏராளமாக உண்டாம். சுவாமி பெயரைச் சொல்லி பூதங்கள் விழுங்குகின்றன போலும். சில கோவில்களில் விளக்குக்கூட இல்லை. இரண்டு கோவில்களுக்கு ஒரு குருக்களாம்! குருக்களுக்கு 6 மாதமாகச் சம்பளம் கிடையாதாம். தஞ்சாவூரிலுள்ள அரண்மனை தேவஸ்தான நிர்வாகமென்று அறிந்தேன். அங்கு கடைசியாக ஆட்சி செலுத்தியது மகாராஷ்டிர மன்னர்கள். அந்தப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் இன்னும் உள்ளனர். அவர்கள் நிர்வாகத்திலுள்ள இக்கோவில்கள் அவர்களுக்கோ தமிழகத்துக்கோ பெருமையளிக்கவில்லை. அந்த ஊர் மக்களும் இக்கோவில்பக்கம் எட்டிப் பார்ப்பதாகவும் தெரியவில்லை. ஏன் விளக்கெதுவுமில்லை என்று அங்கிருந்த ஒரு காவல்காரச் சிறுவனைக் கேட்டதற்கு, வௌவால்கள் பறந்து விளக்கை அணைத்துவிடுவதாகத் தெரிவித்தான். அட கடவுளே! கோவில் பூசைகள் ஒரிவர நடைபெருவிட்டால், ஊரும் மக்களும் எப்படி சுபிட்சமாக இருக்க முடியும். தமிழகத்திலுள்ள தெய்வீகப் பேரவை இதையெல்லாம் கவனித்து ஆவன செய்யுமா?

விடக்கையே பெருக்கிப்
பலநாளும், வேட்கையாற்
பட்ட வேதனை தன்னைக்,
கிட்க்கிலேன் நெறிகாணவு
மாட்டேன், கண்குழிந்து
இரப்பார்கையில் ஒன்றும்,
இடக்கிலேன் பரவைத்
திரைக்கங்கைச், சடையானை
உமையாளையோர் பாகத்,
தடக்கினனை அந்தாமரைப்
பொய்கை ஆரூரானை மறக்க
லுமாமே.

—சுந்தரமூர்த்திசுவாமிகள்.

[எல்லா நாட்களிலும் ஊனைப் பெருக்கவேமுயன்று அதுகாரணமாக எழுந்த ஆசையால் உளதாகிய துன்பத்தைக் கடக்கமாட்டாமலும் கடந்து நன்னெறியை உணரமாட்டாமலும், பசியால் கண்குழிந்து வந்து இரப்பவர் கையில் ஒன்றையும் இடமாட்டாமலுள்ளயான். பரத்தலையுடைய அலைகளைக்கொண்ட கங்கையாகிய நீரையுடைய சடையை உடையவனும், உமையாளைத் தனது திருமேனியின் ஒருபாகத்தில் அடக்கினவனும் ஆகிய தாமரைப் பொய்கைகளையுடைய திருவாரூர் இறைவனை [illegible] மறத்தலும் இயலுமோ!]

## துணுக்காய் அபிவிருத்தி
### அரசாங்க அதிபருக்கு மகஜர்

துணுக்காய், வெள்ளி

துணுக்காய் கிராம முன்னேற்றச்சங்கக் காரியதரிசி திரு. க. சந்திரசேகரம் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகராவுக்குநீண்டமகஜரொன்றை சமர்ப்பித்துள்ளார்.

வீதிகள்தான் எங்களுடைய முக்கிய பிரச்னையாகும். பயிர்செய்கைக்குரிய காணிகளுக்கு செல்லக்கூடிய வீதி வசதிகள் அமைத்துக் கொடுத்தால் துணுக்காய்ப் பகுதியில்இருந்து நாட்டின் தேவைக்குவேண்டியபெரும் பகுதியான உணவை நாம் கொடுக்கமுடியும். துணுக்காய்ப்பகுதிக்கு ஒருபகிரங்க மேற்பார்வையாளர் நியமிக்கப்படல்வேண்டும். இப் பகுதியின் நிர்வாகத்துக்கும்அபிவிருத்திக்கும் மூலநாடி போன்றிருக்கும் காரியாதிகாரிக்கு வசதியான கந்தோரும், விடுதியும்இங்குஇல்லை. ஆகையால் இக்குறைபாடும் உடன் கவனிக்கப்படல் வேண்டும்.

துணுக்காய் சேவைக்கு புதிய பஸ்கள்உபயோகிக்கப் படல்வேண்டும். தற்பொழுது சேவையிலிடப் படும் பஸ்கள் பழையனவாகவிருப்பதால் சேவை அடிக்கடி தடைப்படுவதுடன் பொதுமக்களும் கஷ்டப்படவேண்டியுள்ளது. பின்தங்கியுள்ள துணுக்காய் பகுதியை அபிவிருத்தி செய்யும்படி கேட்டுக்கொள்கின்ரேம்.

# "விசேஷ விதிகள் அவசியமில்லை
## சட்டஅமைப்பு மூலம்தமிழர் உரிமையை பாதுகாக்க வேண்டும்"
### குரும்பசிட்டியில் பெர்னுட் சொய்ஸா

குரும்பசிட்டி, வெள்ளி

இடதுசாரியினர், சிறுபான்மை இனத்தவரின் அடிப்படை உரிமைகள் வழங்கப் படுவதற்கு எதிரானவர்களல்ல. 1948ல் சுதந்திரம் பெற்றுக் கொண்ட போதிலும் பூரண பொருளாதார சுதந்திரத்தை நாம் அடையவில்லை. அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் கோடிக் கணக்கான ரூபாவை தேயிலைத் தோட்டங்களில் கிடைக்கும் லாபப் பணத்தைச் சுரண்டுகின்றன. உலக சந்தையில் இலங்கைத் தேயிலை விலைமதிப்புக் குறைந்துள்ளது"

குரும்பசிட்டி கிராம முன்னேற்ற சங்க மண்டபத்தில் "இன்றைய அரசியல் நிலை" பற்றி கொழும்பு தெற்கு எம். பி. திரு. பெர்னுட் சொய்சா மேற்கண்டவாறுகூறினுர். கூட்டத்துக்கு திரு. வ. கந்தையா தலைமை வகித்தார்.

திரு. பெர்னுட் சொய்ஸா மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"தேசிய அரசு அமைக்கஉதவிய சமஷ்டிக் கட்சியினர்' ஆசிரியர், அரசாங்கஊழியர் இடமாற்றம், தொழில் வேலை வாய்ப்பு, அந்நிய செலவாணிக் கோட்டா போன்ற சில சலுகைகளைத் தமது கட்சி ஆதரவாளர்களுக்குப் பெற்றுக் கொடுத்தனரே தவிர தமிழரின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கத் தவறி விட்டனர்.

இலங்கையின் அரசியல் திட்டத்தைத் திருத்தியமைக்க குழு ஒன்றினைத் தெரிவு செய்ய அரசாங்கம் முன்வந்துள்ளது. 1956ம் ஆண்டில் சமஷ்டி அமைப்பு முறை சேர்க்கப்பட வேண்டும். எனக் கோரி தமிழரசுக் கட்சியினர் கமிட்டியில் அங்கம் வகிக்க மறுப்புத் தெரிவித்தனர். ஆனுல் இன்று ஐக்கிய தேசியக் கட்சியினர் ஒற்றையாட்சி முறையிலேயே அமைக்க முற்படும் திட்டத்தை ஏற்க முன்வருகின்றனர். அரசியல் திட்டத்தின் 29வது ஷரத்தினை மாற்றக் கூடாது எனவும் குரல்எழுப்புகின்றனர். ஆனுல் இடதுசாரிகள், 29ம் பிரிவு சிறுபான்மை இனத்தவருக்கு மொழி, மத, பிரஜா உரிமை போன்ற எந்த உரிமைகளிலும் சிறந்த பாதுகாப்பு அளிக்கக் கூடியதல்ல என்றேகருதுகின்றனர்.

தமிழ் மொழி விசேஷவிதிகளை அமுலாக்குவது. குடியேற்றக் காணிப் பங்கீடு, மாவட்டசபை நிறுவுதல் என்ற மூன்று திட்டங்கள் கொண்ட ஒப்பந்தம்யூ. என். பி. க்கும், சமஷ்டிக் கட்சிக்குமிடையில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த இரகசிய ஒப்பந்தத்தை இடது சாரியினர் எதிர்க்கின்றனர். தமிழ் மொழி விசேஷ விதிகளை அமுலாக்குவதால் தமிழர் உரிமைகள் கிடைக்கப் போவதில்லை. சட்டஅமைப்பு மூலம் அடிப்படை உரிமைகள் வழங்கப்படவேண்டும். விஷேஷ விதிகளை எந்த அரசாங்கம் பதவிக்கு வந்தாலும் மாற்றிக் கொள்ள முடியும்.

எந்த அரசாங்கமும், ஒவ்வொரு பிரஜையும் தனது தாய் மொழி மூலம் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ள வசதி அளிக்க வேண்டும். அரசின் நோக்கம் மக்களுக்குத்தெரியப்படுத்த மூன்று மொழி மூலம் சகல அரசாங்க அலுவல்களும் அறிவிக்கப்பட வேண்டும்.

மாவட்டசபைகள் நிறுவி ஸ்தலஸ்தாபன மன்றங்களுக்கு கூடிய அதிகாரங்கள் வழங்கெப்படுவது நன்மையானது. ஆனுல் இப் போர்வையில் தேசம் பிளவுபட்டுபிரிக்கப்படுவது அனுமதிக்க முடியாது."

# 'தமிழ்த் தலைவர்களிடமுள்ள முக்கிய பொறுப்பு'

உடுவில், வெள்ளி

"இன்று நாட்டை ஆளும் தேசிய அரசாங்கம் மற்றைய சிங்களத் தலைவர்களான சி. பி. டி. சில்வா, பிலிப் குணவர்த்தன, தகநாயக்கா போன்றவர்களின் கீழ் உள்ள கட்சிகளில் மட்டும் தங்கி இருக்கவில்லை. தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் ஆகிய இரண்டின் முழுப் பலத்திலுமே தங்கியிருக்கின்றது. இதனுல் இன்றைய நாட்டின் முக்கிய பிரச்னைகளை தீர்ப்பதில் சிங்கள மக்களைக் காட்டிலும் தமிழ் மக்களே பொறுப்புடையவர்களாயிருக்கின்ருர்கள்".

நேற்று மாலை சுன்னுகம் சந்தை மைதானத்தில் அரசாங்கத்தின் பங்கீட்டரிசிக் குறைப்பை எதிர்த்து இலங்கை சமசமாஜக்கட்சியின் வாலிபமுன்னணியால் நடத்தப்பட்ட பிரசாரக் கூட்டத்தில் பேசிய திரு. பெர்னுட் சொய்சா மேற்கண்டவாறு கூறினுர். சுன்னுகம் பட்டினசபைத் தலைவர் திரு. பொ. நாகலிங்கம் கூட்டத்திற்கு தலைமை வகித்தார்,

திரு. பேனுட் சொய்ஸா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"கல்வியில் புதிய திட்டம் கொண்டுவர உலகச் சுற்றுப் பயணம் மேற்கொண்ட கல்வி மந்திரி தனது திட்டத்தில் செல்வக் குடும்பத்து பிள்ளைகள் வசதியாக படித்து உயர் பதவிகள் வகிக்கவும், ஏழைக் குடும்பத்து பிள்ளைகள் தம் பெற்ருேர் செய்யும் தொழிலைத் தொடர்ந்து மேற்கொள்ளவுமே வழி வகுத்துள்ளார். நமது நாட்டில் அரிசி இல்லை. மாவு இல்லை. உப உணவுப் பொருட்கள் இல்லை. இந்நிலையில் அரசாங்கம் எம்மை வருத்தி பிறநாட்டவரை மகிழ்விக்க முயல்கிறது. உலக நாடுகளில் அரிசி இல்லை எனக் கூறுவது பொய். சீன தன்னுடைய அரிசி, றப்பர் ஒப்பந்தத்தில் காட்டியுள்ள விலையைவிட சற்று கூடுதலாக கொடுத்தால் இலங்கைக்கு வேண்டிய அரிசி தருவதாக கூறியபோது அரசாங்கம் அதற்கு மறுத்து விட்டது. கூட்டரசாங்க காலத்தில் ஆடம்பரப் பொருள்களுக்கு "கியூ"வில் நின்ற மக்கள் இன்றைய அரசாங்கத்தில் அத்தியாவசியப் பொருள்களுக்காக "கியூ"வில் நிற்கின்றனர். இந்நிலை மாறவேண்டும். வயிற்றுப்பிரச்னை இது. இது தீர்க்கப்படாவிட்டால் நாங்கள் ஜனநாயக உரிமைகளை பாதுகாத்து, ஒரு சோஷலிச அரசை இந்நாட்டில் ஸ்தாபிக்க பின்நிற்க மாட்டோம்".

திரு. பொ. நாகலிங்கம் பேசுகையில், 1956-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட நெற்காணிச் சட்டம் முத

[8-ம் பக்கம் பார்க்க]

# தமிழ்நாட்டில் இன்று 2-வது......

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

- தென் சென்னை லோகசபைத் தொகுதிக்கு திரு. ஆர். எம். ஆவுடையப்ப செட்டியார் என்பவர் போட்டியிடுகிருர். அவர் செய்துள்ள புகார் ஒன்றில் வாக்குச் சீட்டுகளிலும் வாக்குச் சாவடிகளிலும் தமது பெயர் தமிழில் அவதியப்ப செட்டியார் என்று அச்சிடப்பட்டிருப்பதாக முறையிட்டுள்ளார்.
- பறங்கிமலைத் தொகுதியில் ஒரு வட்டாரத்தில் ஒரு 'கியூ'வில் நின்ற கணவன் மனைவிக்கிடையே கடுமையான வாக்குவாதம் நிகழ்ந்தது.

"போய் அறிவோடு வாக்களித்துவிட்டுவா, உன் மடத்தனத்தை அங்கே காட்டிவிடாதே" என்ருர் ஒருவர் தமது மனைவியிடம்

"ஆமா உன்னைக்கட்டிக்கிட்டு பதினைந்து வருஷமாச்சுது. இதிலே என் சமத்தெல்லாம் செத்துப் போச்சுதே. இப்போ போயி அறிவோடு எங்கே வோட்டுப் போடுவேன்!" என்ருர் மனைவி தனது கணவனிடம்.

- ஹுன்கரன்ஸால் தொகுதியில் மோட்டிகார் வாக்களிப்பு நிலையத்துக்குத் தேர்தல் நடைபெற்ற தினம் பிற்பகல் வரை எவருமே வாக்களிக்க வரவில்லை. விசாரிக்கப்பட்டதில் அந்தக் கிராம மக்கள் அனைவரும் ஒரு திருமணத்தை நடத்திக் கொண்டிருந்தனர் என்ற விபரம் தெரிய வந்தது. பிற்பகலுக்குப் பின்னரே நிலையத்தில் வாக்களிப்பு நடைபெற்றது.
- கண்பார்வை இழந்த எண்பது வயதுக்கிழவி தனது பேரன் கையில் பிடித்துக் கொண்டு சத்தியமங்கலம் சட்டசபைத் தொகுதியில் தாழமங்கலம் வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்ருர். வாக்களிப்பு நிலையத்துக்குள் சென்றதும், அவருடைய வாக்கு யாருக்கு என்று அங்கிருந்த தேர்தல் அதிகாரி கேட்டார். "தள்ளாத வயதில் தனக்கு மிகவும் உதவி வரும் பேரப்பிள்ளைக்குத்தான் தனது வோட்டு" என்று கிழவி கூறினுள். அவளுடைய பேரன் ஓர் அபேட்சகர் இல்லை என்று தேர்தல் அதிகாரி அக்கிழவியிடம் கூறினுர். உடனே கிழவி முகத்தைச் சுருக்கிக்கொண்டு "வேறு யாருக்கும் வோட்டு போடமாட்டேன்" என்று கூறியவாறே அந்த இடத்தைவிட்டுச் சென்றுவிட்டார்.
- ஆள்மாருட்டம் செய்ததாக 17 வயதுள்ள மல்லிகா என்ற பெண் மணப்பாறையில் கைது செய்யப்பட்டுள்ளார். மீனுட்சி என்ற பெயரில் இரண்டாவது தடவையாக இப்பெண் வாக்களிக்கச் சென்றிருந்தாராம்.
- [illegible] இடங்களில் தேர்தல் வாக்களிக்கும் நேரம் முரசொலி மூலம் அறிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிவுபசாரம்

உடுப்பிட்டி,பு வெள்ளி

வரணிவடக்கு, சைவப்பிரகாச வித்தியாசாலையில் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றி ஒய்வுபெறும் திரு. மு. வேலுப்பிள்ளைக்கு மேற்படி பாடசாலையின் பெற்ருர் ஆசிரியசங்கத்தால் பிரிவுபசாரமளிக்கப்பட்டது.

இச்சேவை நலம் பாராட்டு விழாவிற்குச் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் தலைமை வகித்தார். ஒய்வு பெறும் தலைமையாசிரியர் திரு. மு வேலுப்பிள்ளை பேசுகையில் "இன்றைய சூழ்நிலையில் மாணவர்களின் கல்வித்தரம் பின்தங்கிய நிலையிலுள்ளது. இதற்கு ஆசிரியர்கள்மட்டும் பொறுப்பாளிகள் என்று கூறிவிடமுடியாது. ஆசிரியர்களுடன் மாணவர்களும் பெற்ருர்களும் ஒத்துழைத்தால்தான் மாணவர்கள் கல்வியின் பயனை அடையமுடியும். புனிதமான ஆசிரியப்பணிக்குக்களங்கம் ஏற்படாதவாறு ஆசிரியர்கள் நடந்துகொள்ளவேண்டும்" என்று கூறினுர்.

மற்றும் திருவாளர்கள் வீ.தங்கராசா, பொ.வேலுப்பிள்ளை, வீ.கந்தையா, செ. சிவப்பிரகாசம், பண்டிதர் ஆ. சின்னத்தம்பி ஆகியோரும் பேசினர்.

## திருட்டு வழக்கில் எதிரி விடுதலை

சாவகச்சேரி, வெள்ளி

'வாதி செப்புக்கடாரம் என்கிருர். ஆனுல் கோர்ட்டில் காட்டப்படுவது பித்தளைக் கடாரம். வாதி கூறிய அடையாளங்கள் சரியாக இருந்த போதிலும் உலோகத்தில் வித்தியாசம் இருக்கிறது' என்று கடாரம் ஒன்றை தம்பு-இராஜகோபால் வீட்டிலிருந்து சரவணை கந்தையா என்பவர் திருடியதாக சாவகச்சேரிப் பொலிசாரால் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில், நீதிபதி விசாரணைமுடிவில் எதிரியை விடுதலைசெய்யும்போது கூறினுர். எதிரி அக்கடாரம்தன்னுடையதென்று கூறிய போதிலும், அதை நிரூபிக்கச் சாட்சியங்கள் இல்லாமையால் கடாரம்வாதிக்கெனக் கூறி மாஜிஸ்திரேட் திரு. ஆர். இளையபெருமா எதிரியை விடுதலைசெய்தார், எதிரிசார்பில் புரக்டர் வி. செல்லத்தம்பி ஆஜரானுர். வழக்காளி தரப்பில் சாவகச்சேரிப்பொலிஸார் வழக்கை நடத்தினர்.

## கார்ச் சாரதி கொலை?

கொழும்பு, வெள்ளி

அனுராதபுரத்துக்கருகிலுள்ள ஒரு குளத்தில் மிதந்த ஒருவரின் சடலம் இப்போது அடையாளம்கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இறந்து கிடக்கக் காணப்பட்டவர் ஒருகார்ச்சாரதியென்றும், அவர் அங்கிள் என்று அழைக்கப்படுவார் என்றும் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது. இவரதுதலையில் காயங்கள் இருப்பதாக டாக்டர் தெரிவித்துள்ளார்,

இறந்தவரின்காரை சிலர் வாடகைக்கு எடுத்துச் சென்றனரென்றும் இ கள் கார்திருட்டு,கேடியைச்சேர்ந்தவர்கள் றும் இக்கோஷ்டிகார்ச்சாரதியைகொலைசெய்திருக்கமெனபொலிசார் அஞ்சுகின்றனர்.

சாரதியின்கார் கா குள்ளிருக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## தலைமையாசிரியர்இல்லை

கொடிகாமம், செவ்.

கொடிகாமம் அரசினர் பாடசாலை கடந்த 9மாதங்களாக தலைமையாசிரியர் இல்லாதிருக்கிறது. தலைமையாசிரியர் ஒருவரை நியமிக்குமாறு கொடிகாமம் 'கென்னடிஇளைஞர் கழகம்' கல்விமந்திரிக்கும், வடமாநில வித்தியாதிபதி, சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோருக்கும்மகஜர் அனுப்பியுள்ளது.

## இடமாற்றம் நிறுத்தம்?

உடுப்பிட்டிவெள்ளி

இம்மாதமுடிவிற்குள் நடைபெறவிருந்த கிராமசேவகர்களின் இடமாற்றம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

## படங்கள் அனுப்பியது

வாஷிங்டன், பெப்.17

அமெரிக்கா அனுப்பிவைத்த லூனுஆர்பிட்டர்ன் விண்வெளிக்கலம் சந்திரமண்டலத்தின் சிலபகுதிகளைப் படம் பிடித்து அனுப்பியதாக அறிவிக்கப்பட்டது. இப்படங்கள் தெளிவாக இருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

## இந்திரா

புதுடில்லி, பெப்.16

புவனேஸ்வரில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கல்வீச்சினுல் மூக்கெலும்பு முறிந்து சிகிச்சைசெய்து கொண்டஇந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் மூக்கில் போடப்பட்டிருந்த பிளாஸ்டர் நேற்று அகற்றப்பட்டது. டாக்டர்கள் இன்று அவரை மீண்டும் பரிசோதனை செய்தார்கள்.


# 50 சதத்துடன் விரைவில் செல்வந்தராகுங்கள்

ஒவ்வொரு வாரமும், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் விரைவில் செல்வந்தராகி விடுகின்றனர்.



அடுத்து உங்கள் முறை ஆகலாம்

50 சதத்திற்கு நீங்கள் புத்தம் புதிய கார் ஒன்றையும் பெருந் தொகைக்கான காசோலையையும் பெறலாம்




அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்து இராதீர் உங்கள் தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டுகளை இன்றே வாங்குங்கள்.

உங்கள் அடுத்த பெரிய சீட்டிழுப்பு:
1967 பெப்ருவரி 23-ம் திகதியன்று நாவலப்பிட்டியில் நடைபெறும்.

1-வது பரிசு ரூ. 100,000 அல்லது புத்தம் புதிய மொரிஸ் 1100 காரும், ரூ. 86,750/- ரொக்கமும்



2-வது பரிசு ரூ. 40,000 அல்லது புத்தம் புதிய ஒஸ்டின் மினி டீலுக்ஸ் காரும் ரூ. 28,500/- ரொக்கமும்



3-வது பரிசு ரூ. 10,000 அல்லது புத்தம்புதிய போர்ட் ட்ராக்டர் [கம்பெனி பட்டியலில் கண்டுள்ள விலை ரூ. 14,000/-மாக குறிப்பிடப்பட்டிருக்கும்இந்த ட்ராக்டரை மெஸர்ஸ் சத்தியவதி ஸ்டோர்ஸ் அன்ட் மோட்டார் ட்ருன்ஸ்போர்ட் லிமிட்டெட் ஸ்தாபனத்தார் உபசரணையுடன்]



விசேஷமாகக்குறைக்கப்பட்டவிலையான ரூ.10,000-க்கு வழங்கப்படுகிறது.

கடந்த இரண்டு கார் சுவீப்பில் 100 அதிர்ஷ்டசாலிகள் ரொக்கமாக தலா ரூ. 1226-20 பெற்ருர்கள்.

இந்தக் கார்களையும, ட்ராக்டரையும வாங்குவதற்கான சந்தர்ப்பம சீட்டிழுப்புக்குப் பின்னர் 14 நாட்களுக்கு மட்டுமே வழங்கப்படும.

ஞாபகத்திலிருக்கட்டும்:-

நீங்கள் வாங்கும ஒவ்வொரு தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டும், அதிர்ஷ்டத்தின் வாயிலுககு உங்களை அழைத்துச் செல்கிறது.

50 சதம் முதலீடு செய்து பெரும் செல்வம் தேடுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மீசாலை
# செய்திக்கடிதம்

நமது நிருபர் ச. ஆ. கோபாலமூர்த்தி

மீசாலைப் புகையிரத நிலையத்தின் இருமருங்கும் உப உணவுப்பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. இதன் மூலம் புகையிரதநிலையம் அழகு பெற்றுள்ளதுடன் உணவுப் பொருள்களும் தமது வீட்டுத்தேவைக்குக் கிடைப்பதாக மேற்படி புகையிரத நிலைய அதிபர் திரு. ஏ. வேலாயுதபிள்ளை தெரிவித்தார். விரைவில் மீசாலைச் சந்தைக்கு முன்பாக ஒரு நவீன புகையிரதநிலையம் நிறுவப்படவிருக்கிறது.

**மீசாலைச்சந்தை**

வாழ்க்கைச்செலவு உயர்ந்துள்ள இக் காலத்திலும் யாழ்ப்பாணக்குடா நாட்டில் மிகவும்மலிவாக உணவுப்பொருள்கள் விற்கப்படும் சந்தை மீசாலைச் சந்தையேயாகும். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும் இச்சந்தையில் ஒரு கொத்துஅரிசி ஒருரூபாவிற்கும் பெரியதேங்காய் பதினைந்துசதத்திற்கும், மரவள்ளிக்கிழங்கு ஒருசாக்கு ஒரு ரூபாவுக்கும் விற்கப்படுகிறது.

**வாசிகசாலை**

மீசாலையில் சிறந்தமுறையில்இயங்கிவரும் ஸ்ரீகணேசா வாசிகசாலைக்கு விரைவில் நவீனமுறையில் ஒரு கட்டடம் அமைக்கப்படவிருக்கிறது.

**ஆட்குறைப்பு**

மீசாலையில் இருக்கு நெல் ஆலைக்கு கோட்டா நெல் கடந்த சில மாதங்களாக வழங்கப்படாததால் ஆட்குறைப்புச் செய்யப்பட்டுள்ளது. இதனால் பல தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர்.

**திருடர்கள்**

மீசாலையில் கடந்த சில மாதங்களாக திருடர்களின் தொல்லை அதிகரித்து வருகிறது. பட்டப்பகலில் ஓர் ஆசிரியையின் வீடு கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாம். சைக்கிள்கள் பலதிருடப்பட்டன. நள்ளிரவில் வயலுக்குள் உழவு யந்திரத்தில் சென்று அங்கு குவித்திருந்த நெல்லைக்கொண்டுசென்றுள்ளனராம்.

**தபாற்கந்தோர்**

மீசாலை தபாற்கந்தோர் அதிபரின் துரித முயற்சியால் இப்பொழுது தபாற்கந்தோர் சிறந்த முறையில் இயங்கிவருகிறது.

**சுதந்திரதினவிழா**

மீசாலை தெற்கு சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்ற சுதந்திரதினவிழா இவ்வருடம் சோகமயமாகக் காட்சியளித்தது. மேற்படி விழாவில் திரு. ச. ஆ. கோபாலமூர்த்தி பேசுகையில், மீசாலை மக்களுக்கு அறிவிக்காமல் மீசாலையை இரண்டாகப் பிரித்து ஒரு பகுதியைச் சாவகச்சேரி நகரசபையுடன் இணைத்துவிட்டதாகவும், மீசாலை இப்பொழுது சாவகச்சேரி நகரசபையினால் குறைவாக மதிக்கப்படுவதாகவும் கூறினார்.

திரு. எஸ். விநாயகமூர்த்தி பேசுகையில், மீசாலை தெற்கு, நகரசபையுடன் இணைக்கப்பட்ட நாள்முதல் சாவகச்சேரி நகரசபையிலிருந்து பிரித்துவிடும்படி மீசாலை மக்கள் எழுப்பிய குரல்கள் பலனளிக்கவில்லை என்று கூறினார்.

அநீதியாகவும் ஜனநாயகத்துக்கு விரோதமாகவும் மீசாலை தெற்கு சாவகச்சேரி நகரசபையுடன்இணைக்கப்பட்டதற்குத் துக்கம் தெரிவிக்குமுகாக மூன்று நிமிட நேரம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

## இலங்கை-இந்திய ஒப்பந்தத்துக்கு கண்டனம்

கோப்பாய், வெள்ளி

இலங்கைப் புரட்சிவாத சமசமாஜ வாலிபர் சங்கத்தின் கோப்பாய்க் கிளையின் பொதுக்கூட்டம் அண்மையில், சங்கத் தலைவர் திரு. வே. தம்பிராசா தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில், இலங்கை-இந்திய ஒப்பந்தத்தையும், அதனை ஆதரிக்க முடிவுசெய்துள்ள தமிழரசுக்கட்சியையும் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஒப்பந்தத்தை எதிர்த்து அதிலுள்ள தவறை எடுத்துரைத்த ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினத்துக்கு சங்கம் தனது பாராட்டைத் தெரிவித்தது.

## 'கைத்தொழிலில் ஈடுபடுக'
### மாதருக்கு அழைப்பு

குரும்பசிட்டி, வெள்ளி

''கூட்டுறவு அடிப்படையில் ஐக்கிய நாணய சங்கம் அமைத்து குடிசைக் கைத்தொழில்களில் ஈடுபட மாதர்கள் முன்வரவேண்டும். கோழிவளர்ப்பு, பன்னவேலை போன்றவற்றில் மாதர் கவனம் செலுத்துவதால் குடும்ப வளர்ச்சிக்கு உதவுவதுடன் சமூக முன்னேற்றத்திற்கும் சேவை புரியலாம். தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு வீட்டுத் தோட்டங்கள் அமைத்து உபஉணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதிலும் மாதர் சிறந்த பணிபுரிய வேண்டும்'' இவ்வாறு வலிகாமம் வடக்குப் பிரிவுக் காரியாதிகாரி திரு. ரி. முருகேசம்பிள்ளை குரும்பசிட்டி மாதர் கிராம முன்னேற்றச் சங்கவருடாந்த விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். குரும்பசிட்டி மகாதேவா வித்தியாசாலை மண்டபத்தில் விழா நடைபெற்றது.

## சுவாமி சச்சிதானந்தா 24-ல் இலங்கை திரும்புவார்

யாழ்ப்பாணம், சனி

கடந்தஏப்ரல்மாதம் உலக சுற்றுப்பிரயாணத்தை மேற்கொண்ட இலங்கை திவ்ய ஜீவனசங்க போஷகரான யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தா தனது சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு இம்மாதம் 24-ம் திகதிஇலங்கை திரும்புவார்.

இவர் தனதுசுற்றுப்பிரயாணத்தில் பெல்ஜியம், கிறீஸ் பாரிஸ், லண்டன், ஜேர்மன், பெத்தலகேம் ஜெருசலம், ரோம், நியூயோர்க் ஆகிய இடங்களுக்குச் சென்றுள்ளார். ரோம் நகரில் பாப்பாண்டவரைச் சந்தித்ததோடு, அமெரிக்காவில் யோகிஇன்ஸ்டிடியூட் என்ற ஒரு கலாசாலையை 3 மாதகாலம்நடத்தினார். தனது 54-வது பிறந்த தினத்தையும்கூட கடந்த டிசம்பர் மாதம் 22ம்திகதிஇவர் நியூயோர்க்கில் கொண்டாடியதுகுறிப்பிடத்தக்கது.

கடந்த ஜனவரிமாதம்4-ம் திகதி அமெரிக்காவிலிருந்து புறப்பட்ட இவர் கலிபோணியா, கனடா, ஜப்பான், கொங்கோ, மணிலா, மலேசியா ஆகிய கீழத்தேச நாடுகளுக்குச்சென்று அங்கிருந்து இம்மாதம் 24ந்திகதி இரத்மலானை விமானநிலையத்தை வந்தடையும்போது, விமான நிலையத்தில் இவரை யர்ழ்ப்பாணம் திவ்யஜீவன சங்கத்தினர்சென்று வரவேற்கவிருக்கிறார்கள். (ந. நி.)

## சனசமூக நிலைய புதிய நிர்வாகிகள்

உடுப்பிட்டி, வெள்ளி

கரவெட்டி கிழவி தோட்டம் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. வீ. சிவலிங்கம் தலைமையில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகளாகப்பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர். வீ. சிவலிங்கம் உபதலைவர்: திரு. செ. விவேகானந்தன், இணைச்செயலாளர்கள்: திரு. வீ. யோகேஸ்வரன் திரு. க. யோகநாதன் பொருளாளர், வ சிவசோதி.


## இளம் பற்களை உரமாக வளரச் செய்யவும்

பெரும்பான்மையான பற்கள் அழுகியல்ல, ஆனால் ஈறு வியாதிகளினாலேயே இழக்கப்படுகின்றன என உங்கள் பல் வைத்தியர் கூறுவார்.

உறுதியான ஆரோக்கியமுள்ள ஈறுகளிலிருந்தே சிறுவர்களுக்கு உரமான வெண்பற்கள் வளரும். பற்களை வெண்மையாக துலக்கவும் ஈறுகளை உறுதியாக தேய்க்கவும் போர்ஹான்ஸின் பாதுகாப்பு என்றும் அவர்களுக்கு அவசியம்.

உறுதியான ஆரோக்கியமுள்ள ஈறுகளுக்கும் உரமான வெண்ணிறப் பற்களுக்கும் என்றும் பாவியுங்கள்.

**போர்ஹான்ஸ்** பற்பசை




புகழ்பெற்ற பல் வைத்தியர் ஒருவரின் தனித் தயாரிப்பு முறைக்கு தயாரிக்கப்பட்டது. இதில் ஈறுகளை காக்கும் விசேட மருந்துகள் சேர்ந்துள்ளது.



## உரம் பற்களை என்றும் இளமையுடன் காக்கவும்

உரம் பற்கள், உறுதியான ஆரோக்கியமுள்ள ஈறுகள் இருக்கும்வரை உரமாக இருக்கும். பெரும்பாலான பற்கள் அழுகியல்ல, ஆனால் ஈறு வியாதிகளினாலேயே இழக்கப்படுகின்றன என உங்கள் பல் வைத்தியர் கூறுவார்.

பற்களை வெண்மையாக துலக்கவும், ஈறுகளை உறுதியாக தேய்க்கவும் போர்ஹான்ஸின் பாதுகாப்பு என்றும் உங்களுக்கு அவசியம்.

உறுதியான ஆரோக்கியமுள்ள ஈறுகளுக்கும் உரமான வெண்ணிறப் பற்களுக்கும் என்றும் பாவியுங்கள்.

**போர்ஹான்ஸ்** பற்பசை




புகழ்பெற்ற பல் வைத்தியர் ஒருவரின் தனித் தயாரிப்பு முறைக்கு தயாரிக்கப்பட்டது. இதில் ஈறுகளை காக்கும் விசேட மருந்துகள் சேர்ந்துள்ளது.

824/67


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநகர சபை தொழிலாளி மரணம் மனைவி நஷ்டஈடு கோருகிருர்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மாநகர சபை சுத்தம்செய்யும் தொழிலாளியாகக் கடமையாற்றி மரணமான இராஜப்பு செபஸ்தி என்பவருக்கு நஷ்டஈடு கோரி அவரது மனைவியான திரேசம்மா தாக்கல்செய்த மனு நஷ்டஈடு வழங்கும் நீதிமன்றத்தினுல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

காலஞ்சென்ற இராஜப்பு செபஸ்தி, யாழ்ப்பாணம் மாநகரசபை சுத்தம் செய்யும் தொழிலாளியென்றும், 1965-ம் ஆண்டு ஜூன் மாதம் 16-ந் திகதி அவர் கடமையாற்றிக்கொண்டிருக்கும்போது காலில் போத்தல் வெட்டியதால் ஏற்புவலி ஏற்பட்டு 1965-ம் ஆண்டு ஏற்புவலி ஏற்பட்டு 1965-ம் மரணமானதாகவும், அதற்காக காலஞ்சென்றவரின் மனைவியான திரெசம்மா மாநகரசபையினரிடம் பல தடவைகள் நஷ்டஈடு கோரியும் அவர்கள் வழங்கவில்லை என்றும் மனுதார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மாநகரசபை சார்பில் டாக்டர் இராஜசூரியரின் ஆதரவுடன் புரக்டர் வி.நடராஜாவும், மனுதார் தரப்பில் புரக்டர் ஏ. அன்ரனியும் ஆஜராகியிருந்தார்கள்.

காலஞ்சென்ற இராஜப்பு செபஸ்தி மாநகரசபை ஊழியரென்றும், அவர் கடமையிலிருக்கும் போதே அவருக்கு காலில் போத்தல் வெட்டியது உண்மையே ஆனுலும், அதனுல் ஏற்பட்ட காயத்தினுல்தான் அவருக்கு ஏற்புவலி ஏற்பட்டு மரணமானுர் என்பதை நிரூபித்தால்தான் இதுசம்பந்தமாக மாநகர சபையினர் ஒரு முடிவுக்கு வரமுடியுமென மாநகர சபையினர் தரப்பில் ஆஜரான புரக்டர் வி.நடராசா எடுத்துரைத்தார். இது சம்பந்தமாக விசாரணை செய்ய காலஞ்சென்றவருக்கு வைத்தியபரிசோதனைசெய்த டாக்டர் சிவரத்தினத்துக்கு கட்டளை விடுமாறு உத்தரவிட்டு நீதிபதி மேல்விசாரணையை ஒத்திவைத்தார். [ந. நி]

## இடமாற்றத்துக்கு எதிராக மகஜர்

### வடபகுதி வித்தியாதிபதிக்கு காரைஅபிவிருத்தி சபை

தெஹிவளை, புதன்

காரைநகர் தங்கோடை அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் இரு ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டதையொட்டி கொழும்பில் இயங்கும் காரை அபிவிருத்தி சபை வடபகுதி கல்விவித்தியாதிபதிக்கு ஒரு மகஜர் அனுப்பியுள்ளது. அதன் விபரம் வருமாறு:

''குறைந்த ஆசிரியர்களைக் கொண்ட தங்கோடைஅமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையிலுள்ள நிலைமை, இரு நல்ல ஆசிரியர்களான திருவாளர்கள் வைத்திலிங்கம், தம்பையா ஆகியோரின் திடீர் இடமாற்றத்தினுல் மேலும் மோசமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பதில் நியமனம் ஏதும் செய்யாது, இவ்விரு ஆசிரியர்களையும் கல்வி இலாகா இடமாற்றம் செய்துள்ள நடவடிக்கையினுல் பெரிதும் கலவரமடைந்துள்ள பெற்ருர், ஆசிரியர் சங்கமும், பாடசாலையின் நலன் விரும்பிகளும் இவ்விடமாற்றங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

## நகரசபையின் தீர்மானங்கள்

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித்துறை நகரசபை மாதாந்தக்கூட்டம் சபைத் தலைவர் திரு. என். நடராசா தலைமையில் நடைபெற்றபொழுது ஒன்பதாம் வட்டார அங்கத்தவர் திரு. எஸ். வல்லிபுரம் இரண்டு பிரேரணைகளைச் சபையில் சமர்ப்பித்தார்.

இதுவரை காலமும்நகைத் தொழிலாளர் குடும்பத்தில் உள்ள ஒருவருக்கு மட்டும் தான் பவுன் பர்மிட் வழங்கப்பட்டுவருகிறது. ஆனுல் அந்தமுறையைநீக்கி நகைத் தொழில்செய்யும்ஒவ்வொரு நகைத்தொழிலாளருக்கும் பவுண் பர்மிட் வழங்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஒரு வருடத்துக்கு முன் வெள்ளிக்குபர்மிட் வழங்கப்படுவதற்காக பதிவுசெய்யப்பட்டது. ஆனுல் இதுவரையும் வெள்ளிப் பர்மிட்முறை வழங்கப்படவில்லை. இதனையும் அரசாங்கம் அமுல் நடத்தவேண்டும்.

இவ்விரண்டு பிரேரணைகளின் பிரதிகளை அரசாங்க அதிபர் உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம், பருத்தித்துறை பா. உறுப்பினர் க. துரைரத்தினம், உள்நாட்டு மந்திரி ஆகியோருக்கு அனுப்ப வேண்டுமெனசபை ஏகமனதாக தீர்மானித்தது.

## அதிசய கடற் பிராணி

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித்துறை சக்கோட்டைக்கருகாமையில் உள்ள கடலில் இனம் தெரியாத ஒரு கடற் பிராணி இறந்த நிலையில் ஒதுங்கியுள்ளது. இதன் இரு அலகுகளையும் சக்கோட்டை வாலிபர்கள் கரையில் கொண்டு வந்து வைத்திருக்கிருர்கள். அலகின் நீளம்12அடியளவு இருக்கும். உடலின் நீளம் சுமார்35 அடி இருக்கும். இதைப் பனைமீன் எனப் பலர் கருதுகிருர்கள். ஏராளமான மக்கள் வந்துஇதனைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

## ஆர். ஜி. . .

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

போட்டியிட்டபோதிலும், மார்க்ஸீயவாதிகளின் பலத்த ஆதரவு இவருக்கு இருக்கின்றது, சிறிலங்கா சுதந்திரக்கட்சி மார்க்ஸீய கட்சிகளுடன் இணைவதை ஆர். ஜி. சேனநாயகா பலமாக எதிர்க்கின்ருர். தேர்தல் போட்டிகளைத் தவிர்ப்பதற்கான கூட்டை அவர் வரவேற்ற போதிலும் கூட்டாக தொகுதிகளில் அபேட்சகர்களை நிறுத்துவதை ஆதரிக்கவில்லை சிறிலங்கா சுதந்திரக் சுட்சி மார்க்ஸீய வாதிகளுடன் வைத்திருக்கும் இணைப்பைத் துண்டித்துக்கொள்ள வேண்டும் என்ற திரு. சேனநாயகாவின் கருத்தை இதுவரை சுதந்திரக்கட்சி அசட்டைசெய்துவருவதையும்அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்,

அண்மைக் காலங்களில் திரு. ஆர். ஜி. சேனநாயகா திரு. டட்லி சேனநாயகாவுடன் நெருங்கிப் பழகிவருவதால் விரைவில் அவர் அரசாங்கத்துடன் சேரலாம் என்றும் அப்படிசேரின் பிரமரின் கை அரசாங்கக்கட்சியில் ஓங்குவதுடன் ஆர். ஜி. தமது வகுப்புவாதக்கொள்கையைக் கைவிடலாமென்று கருதப்படுகின்றது.

## தற்கொலை

சங்கானை, புதன்

ஐந்து பிள்ளைகளின் தந்தை சுப்பிரமணியம் சபாரத்தினம் [45 வயது] கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார். இச்சம்பவம் சங்கானை கிழக்கு தொட்டிலடியில் நிகழ்ந்தது. காலம் சென்றவர் நீண்டகாலமாக நோயால் அவஸ்தைப்பட்டார் என்றும் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது. சங்கானைப் பொலிசார் ஸ்தலத்தில் விசாரணை நடத்தினர். டாக்டர் எஸ். குலத்துங்கம் பிரேதபரிசோதனை நடத்திஞர். மரண விசாரணை அதிகாரி திரு. கே. சேனுதிராசா விசாரணை முடிவில் தற்கொலை எனத்தீர்ப்பளித்தார்.

## யாழ். மாவட்ட தேசிய சேமிப்பு வாரம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண மாவட்ட தேசிய சேமிப்பு வாரத்தை முன்னிட்டு வடமாகாண அரசாங்கஅதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமையில் இம்மாதம் 22ம்திகதி பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலை மண்டபத்தில் சேமிப்புவார பொதுக் கூட்டம் ஒன்று நடைபெறவிருக்கின்றது. நிதி அமைச்சர் திரு. யு. பி. வன்னிநாயக்கா சேமிப்பு வாரத்தை அங்குரார்ப்பணம் செய்து வைப்பார். ந. நி)

## சின்னராசா வந்துசேர்ந்தார்

அளவெட்டி, வெள்ளி

சென்னை ராஜா அண்ணுமலை இசைவிழாவில் கலந்துகொண்ட ஈழத்துக் கலைஞர் தவில் வித்துவான் திரு. என். ஆர். சின்னராசா இலங்கை திரும்பினுர். இவர் இசைவிழாவில் இந்திய நாகசுர வித்துவான் சின்ன மௌலானு சாகிப்புக்கும் மதுரை சேதுராமன் சகோதரர்களுக்கும் தவில் வாசித்து பலரது பாராட்டையும் பெற்ருர்.

## ரஷ்ய-அமெரிக்க

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஞமுக்கு ரஷ்யா அனுப்பும் ஆயுதங்களை சீனு தடைசெய்தால், ரஷ்யா கப்பல்மார்க்கமாக அவற்றைவடக்குவியட்ஞமுக்கு அனுப்பலாம் அப்பொழுது ரஷ்யக் கப்பல்களை அமெரிக்கப்படைகள் தாக்கலாம். இதன்மூலம் அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையே நேரடி சண்டைமூளலாம். இதைக் கருத்திற்கொண்டே சீனு புதியநடவடிக்கைகளை மேற்கொள்கிறது'' என்றும் மார்ஷல்டிட்டோ தெரிவித்துள்ளார்.

## தமிழ் தலைவர்.....

[5ம்-பக்கத் தொடர்ச்சி]

லாளி வர்க்க நிலப் பிரபுக்களை பாதிக்கும் என்ற காரணத்தால் அதை எதிர்த்தவர்கள் இன்று பதவியிலிருக்கும்போது ஆதரித்தால் ஏழை மக்கள் எப்படி நிம்மதியுடன் வாழ முடியும் என்ருர்.

திரு. விசுவநாதன் பேசுகையில், தமிழுரிமைச் சட்டம் கொண்டுவந்தவுடன் பிரச்னை தீர்ந்துவிடாது என்றும் அதனை நடைமுறையில் கொண்டுவரவேண்டும் என்றும் இன்றைய பங்கீட்டரிசிக் குறைப்பு அமெரிக்க அரசாங்கத்தின் தூண்டுதலால் ஏற்பட்டது என்றும் கூறினுர்.

திருவாளர்கள் நடராசா, பாலசிங்கம், சிவகுரு ஆகியோரும் பேசினர்.

# ஆஸ்பத்திரியில் தஞ்சமடையும் கால் நடைகள்

கிளிநொச்சி, வெள்ளி

கிளிநொச்சி வைத்தியசாலையில் பொதுமக்கள் தான் சிகிச்சை பெறுகிருர்கள் என்ருல் இரவில் இங்குள்ள கட்டாக்காலிகளும் வார்ட்டில் வந்து படுத்திருக்கின்றனவாம். வைத்தியசாலைக்கு வேலியோ மதிலோ இல்லாததால் இங்குள்ள மாடுகள், ஆடுகள், நாய்கள் இரவுப்பொழுதை சுகமாக ஆஸ்பத்திரிக் கட்டிடங்களில் கழிக்கின்றன.

காலையில் ஆஸ்பத்திரித் தொழிலாளிகள் மிகவும் சிரமப்பட்டு இவைகளை விரட்டிவிடுகின்றனராம்.

## தேசிய இளைஞர்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றை ஏற்படுத்த உதவுவது. தொழில் முக்கியத்துவத்தைப் பரப்புவது. சாதி, இனம் போன்ற சமூக ஏற்றத்தாழ்வுகளை மறந்து நாட்டின் அபிவிருத்திக்குப் பாடுபடுவது.

இதற்கான திட்டங்களை ஆரம்பித்துச் செயல்படுத்துவது. சமுகநலத்திட்டங்கள் பொருளாதாரத் திட்டங்கள், புனரமைப் திட்டங்கள் ஆகியவற்றை ஆரம்பிப்பது, தேசியத்திட்டங்களுக்கு உதவி அளிப்பது. விவசாய கைத்தொழில் திட்டங்களை ஆரம்பிப்பதது ஆகியவற்றில் இளைஞர் சேவைப் படை பயன் படுத்தப்படும்.

இந்த இளைஞர் சேவைப் படைக்கு நீண்டகால கடனுதவித் திட்டம் ஒதுக்கப்படவேண்டுமென்றும் மசோதா கோருகிறது.

இலங்கைக்கும் வெளிநாடுகளுக்குமிடையே இளைஞர் உறவுகளை ஏற்படுத்தவும் இம் மசோதாவின் கீழ்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதற்கமைய இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கும் வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கும் தொண்டர்கள் அனுப்பப்படுவார்கள்,

### பிரதமர் தலைவர்

தேசிய இளைஞர் சேவைச் சபையின் தலைவராகப் பிரதமர் இருப்பார். உப தலைவராக ஒரு மந்திரி இருப்பர். இந்த நியமனத்தைப் பிரதமரே செய்வார். இவர்களைத் தவிர மேலும் ஐவர் இச்சபைக்கு நியமிக்கப்படுவார்கள். இவர்களின் பதவிச்காலம் நான்கு வருடங்களைக்கொண்டிருக்கும். இச்சபையில் அங்கத்துவம் பெறுவதற்குப் பெண்களுக்கும் தகுதியுண்டு.

## சுவீப்

**முதல் பரிசு:**

28 Z 0396-ரூ.90,300-00

**இரண்டா பரிசு:**

15 [illegible] 0125-ரூ.36,120-00

**மூன்ருவது பரிசு:**

37 V 0892 -ரூ. 9,030-00

(தலா ரூ. 451-80 பரிசு பெறும் 100 டிக்கட்டுகள்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 07 | O | 0700 | 05 | [illegible] | 0150 |
| 03 | S | 0710 | 06 | N | 0996 |
| 06 | N | 0862 | 29 | P | 0055 |
| 29 | O | 0601 | 15 | B | 0602 |
| 12 | X | 0940 | 36 | S | 0374 |
| 13 | [illegible] | 0785 | 16 | K | 0118 |
| 06 | C | 0137 | 26 | [illegible] | 0386 |
| 20 | K | 0974 | 01 | L | 0141 |
| 10 | G | 0168 | 06 | A | 0626 |
| 15 | M | 0881 | 07 | [illegible] | 0672 |
| 20 | P | 0171 | 03 | [illegible] | 0267 |
| 05 | G | 0224 | 01 | E | 0851 |
| 32 | N | 0228 | 14 | R | 0732 |
| 43 | G | 0265 | 34 | P | 0807 |
| 20 | L | 0607 | 08 | K | 0802 |
| 04 | R | 0268 | 17 | P | 0799 |
| 24 | G | 0545 | 05 | K | 0354 |
| 20 | A | 0521 | 15 | R | 0150 |
| 31 | A | 0747 | 04 | B | 0529 |
| 16 | E | 0412 | 24 | M | 0960 |
| 18 | B | 0485 | 33 | X | 0598 |
| 09 | V | 0391 | 36 | E | 0994 |
| 29 | P | 0009 | 15 | Y | 0633 |
| 08 | F | 0794 | 31 | T | 0733 |
| 01 | N | 0941 | 25 | Y | 0257 |
| 10 | W | 0907 | 16 | C | 0509 |
| 18 | K | 0793 | 30 | E | 0501 |
| 34 | S | 0966 | 19 | S | 0050 |
| 20 | V | 0447 | 06 | A | 0337 |
| 20 | S | 0481 | 06 | B | 0587 |
| 03 | T | 0301 | 15 | C | 0106 |
| 21 | O | 0216 | 12 | R | 0120 |
| 28 | F | 0636 | 23 | O | 0437 |
| 11 | Z | 0648 | 18 | U | 0814 |
| 29 | T | 0901 | 21 | K | 0747 |
| 32 | Z | 0145 | 15 | C | 0689 |
| 26 | M | 0178 | 30 | J | 0755 |
| 32 | Y | 0463 | 05 | R | 0480 |
| 21 | C | 0724 | 04 | J | 0108 |
| 19 | P | 0322 | 19 | S | 0211 |
| 27 | A | 0551 | 35 | S | 0809 |
| 03 | L | 0028 | 31 | D | 0888 |
| 08 | G | 0694 | 06 | E | 0096 |
| 37 | V | 0142 | 31 | X | 0445 |
| 15 | L | 0687 | 02 | E | 0994 |
| 19 | Z | 0888 | 10 | B | 0050 |
| 03 | B | 0019 | 25 | U | 0592 |
| 18 | C | 0175 | 31 | N | 0157 |
| 10 | V | 0005 | 29 | L | 0704 |
| 35 | N | 0161 | 18 | N | 0231 |


## தேவை

### முரசுமோட்டை பலநோக்கு கூட்டுறவு சங்கம் பரந்தன்

மேற்படி சங்கப் பண்டசாலைக்கு ஒரு களஞ்சியப் பொறுப்பாளர் தேவை. கீழ்க்காணும் தகமைகளையுடையவர்கள் தமது விண்ணப்பத்தை ''தலைவர் முரசுமோட்டை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பரந்தன்'' என்ற விலாசத்திற்கு 28-2-67 திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் மனுச் செய்தல் வேண்டும்.

**தகமைகள்**

1. [அ] கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் உடையவராக இருத்தல் வேண்டும்.
   [ஆ] வியாபார அனுபவம் உடையவர் விரும்பத்தக்கது.
2. வயது. 21 தொடக்கம் 35 வரைக்கும்.
3. பிணை. உரொக்கம் ரூபா 1000/- ஆதனம் ரூபா 2000/-
4. சம்பளம். மாதம் ரூபா 120/- சகலபடிகளும் உட்பட.

**குறிப்பு**

விண்ணப்பத்துடன் தராதரப்பத்திரங்களினதும் ஆறு மாதத்திற்குள் பெற்ற இரு குணநற்சான்றுப் பத்திரங்களினதும் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும். முன்பு கூட்டுறவுச் சங்கங்களில் வேலை செய்த விண்ணப்பகாரர் அச்சங்களின் தலைவர்களால் கொடுக்கப்பட்ட நற்சான்றுப் பத்திரங்களின் பிரதிகள் மேலதிகமாக இணைக்கப்படல் வேண்டும்.

முரசுமோட்டை ப. நோ. கூ. சங்கம்.
பரந்தன். 18-2-67.
1069

சி. இரத்தினசிங்கம்,
காரியதரிசி.


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org